185424

வார்த்தைகளைவிட கணக்குகள் அதிகம் பேசும்!

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,

லிமிடெட், லாகூர்.

நடை முதல் வியாபாரம்	ரூ.	7,00,00,000
புது வியாபாரம்	ரூ.	1,61,00,000
ஆதாயம் ...	ரூ.	1,13,00,000
ஆயுள் நிதி ...	ரூ.	1,01,00,000

பிரதிநிதிகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

முழு விபரத்திற்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

பிராஞ்சு மானேஜர்,
324, தம்புசெட்டி தெரு, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-NOV 1938
MADRAS

TONSILS

டான்ஸில்ஸ்

தொண்டையில் இருபக்கங்களிலும் சதை வளர்ந்திருப்பதை ஆபரேஷன் இல்லாமல் அதி ருசிகரமான மருந்தினால் வெ சீக்கிரத்தில் கரைக்கப்படும். நூற்றுக்கணக்கானவர் நன்மையடைந்துளர். ராஜாக்களாலும், பிரபல உத்தியோ தர்களாலும் புகழ்ந்து பேசப்பட்ட டாக்டர் நாதம்ஸ் டான்சி ளுக்கு

விவரங்களுக்கு:

Kent Chemicals,
Mowbray's Road,
Roy-pettah, Madras.

ஆரிய சரித்திரம்

நீதிக் கதைகள்

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப்படங்களும் அமையப்பெற்றது. நான்காம் பதிப்பு ... விலை ரூ. 1—0—0

ஆத்திச்சூடி - நீதிக்கதைகள்

ஸ்ரீ கலைமகள் அவதாரமாகிய ஔவையார் அருளிச்செய்த ஆத்திச்சூடி நீதிவாக்கியங்களுக்கு உதாரணமாக இதிகாச, புராண, சரித்திரங்களிலிருந்து எடுக்கப்பெற்ற 108 கதைகள் இனிய செந்தமிழ் நடையில் நீதிகளை விளக்கி எழுதப்பெற்றுள்ளன.

விலை ரூ. 0—8—0

பரதன் - உத்தம சகோதரன்

பலகோடி நீதிகளைப் புகட்டும் ஸ்ரீ ராமாயணக் கதைகளைச் சுருக்கமாகவும், அவற்றுள் பரதனது குணாதிசயங்களை விரித்தும், கம்ப ராமாயணத்தினின்றும் சில முக்கிய மேற்கோட்பாக்களுடன் தெள்ளிய நடையில் யாவருக்கும் எளிதில் புலப்படும்படி இனிமையாக எழுதியுள்ளது. ... ... விலை ரூ. 0—8—0.

சூளாமணி வசனம்

ஜைன காவியங்களுள் ஒன்றாகிய சூளாமணி இனிய வசன நடையில் யாவரும் எளிதில் படித்து ஆனந்தமடையுமாறு, தமிழ் பண்டிதர் ந. பலராமையர் அவர்களால் இயற்றப்பட்டு அரும்பத அகராதியுடன் பிரசுரிக்கப்பெற்றுள்ளது. விலை ரூ. 1—0—0

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ் பெருங்காப்பியம் ஐந்தனுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிகனாகிய கோவலன், அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக்கூறும் அழகிய நூலாகும். விலை ரூ. 1-0-0

கணேஷ் கம்பெனி,

தம்புசெட்டி தெரு, சென்னை.

நேஷனல் மியூச்சுவல்

அஷ்யூரன்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட்.

டைரக்டர் போர்ட்:

ஆர். வி. லட்சுமிரதன் ஜூனியர்,
டைரக்டர், லட்சுமிரதன்ஸ் லிமிடெட், சென்னை (அக்கிராசனாதிபதி)

ஏ. வி. ஸம்பத் அய்யங்கார், பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், "கேசவ பிரசாத்" மைலாப்பூர், சென்னை.

எஸ். வி. ஸ்வாமி, பி. ஏ.
மானேஜர், "இந்தியன் எக்ஸ்பிரஸ் & தினமணி", சென்னை.

எம். டி. கொழுந்தைவேலு செட்டியார்,
நிலச்சுவான்தார் & பாங்கர், சியாழி.

ஆர். விஸ்வநாதன், பி.ஏ., பி.எல்.,
டைரக்டர், இண்டோ கமர்ஷியல் பாங்கி, லிமிடெட், (எக்ஸ்-அபிஷியோ)

பி. நாகராஜன், எம். ஏ.,
(எக்ஸ்-அபிஷியோ)

பிரதம வைத்திய பரிசோதகர்:
டாக்டர் வி. ஆர். கிருஷ்ணஸ்வாமி, எம். பி., எம். எஸ்.,

காரியதரிசிகள்:
ரர்ஜம் & விஸ்வம் லிமிடெட்.

பாலிஸிதாரர்கள்தான் இதை நிர்வகிக்கின்றார்கள்.

100% விகிதமான மிகுந்த கூட்டுறவுள்ள இந்த ஜீவிய அஷ்யூரன்ஸ் ஆபீஸ், சென்னையிலிருந்து பலருக்கு ஏற்ற நூதனமான அஷ்யூரன்ஸ் முறைகளை கையாண்டு வருகிறது.

நமது ஏஜன்ஸி இலாகாவில் நல்ல திறமையுடன் கமிஷன் முறையிலோ, சம்பள முறையிலோ வேலைசெய்யக்கூடியவர்களுக்கு இடமிருக்கிறது.

இதர விஷயங்களுக்கு "காரியதரிசிகளுக்கு" எழுதவு

தலைமை ஆபீஸ்:

டெலிபோன்: நெ. 3600.	6, பிலிப்ஸ் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.	தபால் பெட்டி நெ. 114.



ஸங்தோஷ் வீடு.
1, ராஜா ஸங்தோஷ் வீதி,
அலிபூர். 1-1-37

போர்ன்வீடா எனக்கும் என் குழந்தைகளுக்கும் உயர்ந்த ஆகாரமாக இருக்கிறது. அதன் திவ்யமான மணத்தை நாங்கள் விரும்புவதுடன் சரீரத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்காக வழக்கமாகச் சாப்பிட்டுக்கொண்டு வருவதாக ஸங்தோஷ் மகா ராணியான ரேணுகாராய்ச் சௌத்ரி தெரிவிக்கிறாள்.

(ஸங்தோஷ் மகாராணி)

ஆயிரக்கணக்கானவர்கள் போர்ன்வீடா திடகாத்திரத்திற்கு வேண்டிய நிரந்தரமான போஷாக்கைத் தருகிறது என்று ஸ்தாபித்ததை ஸங்தோஷ மகாராணியின் சொந்த அனுபவத்திலிருந்து இதை ஊர்ஜிதம் செய்கிறாள்.

ருசிகரமான மணமோடும் சுலபமாக ஜீர்ணமாகக் கூடியதுமான போர்ன்வீடா குழந்தைகளுக்கு ரொம்பவும் நல்லது. வழக்கமாகச் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் திடத்தை விருத்தி செய்வதோடுகூட வேண்டிய அளவு ஊக்கத்தையும் வியாதிகள் ஏதாவது வந்தால் அதைத் தாங்கக்கூடிய சக்தியையும் கொடுக்கிறது.

பகலில் அருந்தினால் வேலையில் களைப்பு ஏற்படாது. எல்லா ஸ்டோர்களிலும், மருந்து ஷாப்புகளிலும் 1 பவுண்டு, $\frac{1}{2}$ பவுண்டு, $\frac{1}{4}$ பவுண்டு டின்களில் கிடைக்கும். கைபடாதது.

"போர்ன்வில்" என்னுமிடத்தில் காட்பரியாரால் செய்யப்பட்டது.

அது ஒரு பலமான கோட்டை

65,000 எண்ணிக்கைக்கு அதிகமாகவேயுள்ள தனது பாலிஸிஹோல்டர்களுக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகவே புரிந்துவந்திருக்கும் உண்மையான சேவை என்னும் அசையாத கற்கோட்டையில் தன் கீர்த்தியை நாட்டியிருக்கும் 'நாஷனல்' உறுதியில் நிகரற்றது.

பாலிஸிதாரர்களுக்குத் தாராளமாய்ச் சலுகை காட்டுவதிலும், உரிமைகளை உடனுக்குடனே தீர்த்து வைப்பதிலும் இது மிகப் பிரசித்திபெற்ற ஸ்தாபனம். வியாபாரமந்தம் போன்ற பல ஆபத்துக் காலங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இதனுடைய பாலிஸி உண்மையிலேயே நல்ல மூலதனம்.

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

(தலைமை ஆபீஸ்: கல்கத்தா)

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
எஸ்பிளனேட், மதராஸ்.

டிராபிகல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

டெல்லி

சேர்மன்: ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸ்
(ஹரிபுரா காங்கிரஸின் பிரஸிடெண்ட்)

பண்டித மோதிலால் நேரு — ஹகீம் அஜ்மல்கான்
டாக்டர் எம். ஏ. அன்ஸாரி — டி. ஏ. கே. ஷேர்வானி

முதலிய கீர்த்திவாய்ந்த தலைவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட
மிகச் சிறந்த தேசீய ஸ்தாபனம்.

1. இரண்டு கோடி ரூபாய்க்கு மேலாக பாலிஸிகள் கொடுத்திருக்கிறது.
2. பாலிஸிதார்களுக்கு ஆரம்பத்திலிருந்து போனஸ் கொடுக்கிறது.
3. சொந்த கட்டடங்களிலும், கவர்மெண்ட் ஸெக்யூரிடிகளிலும் இதர நல்ல ஸெக்யூரிடிகளிலுமாக தேவைக்கு மேலாகவே பணம் போட்டிருக்கிறது.
4. சிறந்த தேசீய வாதிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
5. ஐந்து காங்கிரஸ் பிரஸிடெண்டுகள் டைரக்டர்களாக இருந்திருக்கிறார்கள்.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் ஆர்கனைஸர் விவரங்களுக்கும்
கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:

கே. எஸ். ராமமூர்த்தி, எம். ஏ.
பிராஞ்ச் செக்ரிடரி,
189/B, மௌண்ட் ரோடு, மதராஸ்.



சந்தோஷத்திற்கு வழி

சந்தோஷ ராஜ்யத்திற்குப் போவதற்கு வழி யுனைடட் இந்தியா. உங்களுடைய சந்தோஷத்தைத் தேடிக் கொள்வதாயிருந்தாலும் சரி; அல்லது உங்கள் மனைவி குழந்தைகளுக்குச் சந்தோஷத்தைத் தேடிக் கொடுப்பதாயிருந்தாலும் சரி; நீங்கள் எத்தகைய அந்தஸ்தில் இருந்தபோதிலும் சரி; யுனைடட் இந்தியா நீங்கள் விரும்பும் சந்தோஷத்தை அடைவதற்கு வேண்டிய சாதனத்தை கொடுக்க வல்லது.

யுனைடட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

ஸ்தாபனம் :—1906 ஞு தலைமை ஆபீஸ் : மதராஸ்

டிரஸ்டி : **சென்னை கவர்ன்மெண்டின்**

அபீஷியல் டிரஸ்டி

வான்கார்ட்

மோட்டார் & ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்

வான்கார்ட் பாலிஸி

ஒரு இணையற்ற பொக்கிஷம்

வான்கார்ட்

எப்போதும் உங்களுக்குச் சேவை செய்யத் தயாராயிருக்கிறது

முழு விபரங்களுக்கு எழுதுக :—

வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

9-9A, பிளாக்கர்ஸ் ரோட்,

மவுண்ட் ரோட், :: :: சென்னை.

போன் நம்பர் : 8558.

Raman Ink

For Fountain Pens and Office Use.

UNQUESTIONABLE QUALITY,
ATTRACTIVE PRICES,
MADE IN INDIA.

N. S. RAMAN, 9, Philips Street, Madras.

பாலிஸி ஹோல்டர்களுக்குச் சொந்தமானது.

இந்தியன் மியூச்சுவல் பாலிஸிதாரர்களின் ஸ்தாபனம். பாலிஸிதாரர்களின் நன்மைதான் கம்பெனியை நடத்துவதின் ஒரே முக்கியமான நோக்கமாகும்.

பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் அனுபவம் வாய்ந்த நிர்வாகிகளாலும், ஜனசேவையில் கருத்துள்ள டைரக்டர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டு, இந்த அஸோஸியேஷன் தினமும் வளர்ந்து வருகிறது. அதன் முன்னேற்றம் பிரமாண்டமானது. அதன் சட்டங்களும், வேலை செய்து வரும் வழியும், நேர்மையான சேமிப்பு முறையும் ஆலோசனையுடன் இன்ஷ்யூர் செய்பவர்கள் யாவரது கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. மெம்பராகவோ அல்லது பிரதிநிதியாகவோ உடனே சேருங்கள்.

டைரக்டர்கள் :

ஸர். வே: ராமேசம் Kt.

ராவ் பகதூர். கே. பலராம ஐயர்.

திவான் பகதூர் ஏ. வி. ராமலிங்க ஐயர்.

இன்னும் மற்றவர்கள்.

இந்தியன் மியூச்சுவல்
லைப் அஸோஸியேஷன், லிமிடெட்

10, மவுண்ட் ரோடு, சென்னை.

ஸ்ரீ பரசுராம சித்த ஔஷதாச்ரமம்,

திருவண்ணாமலை (N. A. Dt.)

இந்த வைத்தியசாலையில், சகல வியாதிகளுக்கும், சித்தர்களுடைய முப்பு குருமுறையில் தயாரித்த, உத்தமமான மருந்துகளைக்கொடுத்து குணப்படுத்தப்படும். அனுபவமும், கைகண்ட முறையுடன் கூடின மருந்துகளாகையால் எவ்வித வியாதியையும் குணப்படுத்த முடியுமென்று உத்தரவாதம் செய்யப் படுகின்றது.

க்ஷயம் (ட்யூபர்குளாஸிஸ்) நீர் ரோகம் முதலிய கடுமையான வியாதிகளுக்கு உத்தரவாதத்துடன் கூடிய பிரத்தியேக மருந்துகள் உண்டு. அநேக பிரபலஸ்தர்களால் நன்கு மதிக்கப் பெற்றது. ஓர் முறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். நேரிலோ அல்லது கடித மூலமாகவோ விபரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

மியுச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 187, மவுண்ட்ரோட், சென்னை

டைரக்டர்கள்

திவான் பகதூர் M. பாலசுந்தரம் நாயுடு ஸி. ஐ. இ., டைரக்டர், பாங்க் ஆப் ஹிந்துஸ்தான் லிமிடெட், சென்னை. (சேர்மன்)

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி பி. ஏ., பி.எல். ஸி. ஐ. இ., மாஜி அட்வகேட் ஜனரல், சென்னை. (டிபுடி சேர்மன்)

ஸ்ரீ எஸ். எம். ஆர். எம். சோலையப்ப செட்டியார், பாங்கர், பள்ளத்தூர், ராமனாதபுரம் ஜில்லா.

ராவ் பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி.ஏ. பி.எல். அட்வகேட், சென்னை,

ஸ்ரீ எஸ். சட்டநாதகராயாலர் எம். ஏ. பி. எல்., எம். எல். ஏ., மிட்டாதார், திருவனந்தபுரம்.

ஸ்ரீ எம். சுப்பராய ஐயர் பி. ஏ. பி. எல், அட்வகேட், மைலாப்பூர், சென்னை.

டாக்டர். டி. வி. ரங்கநாத ராவ். எல். ஸி. பி. எஸ் (பம்பாய்) கண் டாக்டர் (சென்னை கவர்ன்மெண்ட் கண் ஆஸ்பத்திரியில் இருந்தவர்.)

ஸ்ரீ. S. நாகராஜ அய்யர் பி. ஏ. பி. எல்., அட்வகேட், மைலாப்பூர்.

ஸ்ரீ என். எஸ். ராமஸ்வாமி ஐயர், ஆடிட்டர், 250, தம்புச்செட்டித் தெரு, சென்னை

ஸ்ரீ A. K. ஸ்ரீராமன் பி. ஏ. பி. எல், அட்வகேட், கெ. 2, சமஸ்கிருத காலேஜ் ரோட், மைலாப்பூர்.

ஸ்ரீ டி. வி. ராமமூர்த்தி பி. ஏ. பி. எல். எப். எஸ். எஸ். எக்ஸ் அபீஷியோ டைரக்டர், காரியதரிசி.

உங்கள் ஆயுளையும் சொத்துக்களையும்

ஜுபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி (லிமிடெட்) யில்
இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்
(1919 ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

நல்ல முறையில் சகல வித இன்ஷ்யூரன்சும் செய்யப்படுகிறது	19 வருஷ கால உழைப்பினாலும் எல்லாவித சோதனைகளாலும் சோதிக்கப்பட்டிருக்கிறது	கம்பெனி எல்லா பாத்யதைகளையும் உடனே கொடுத்து பொது ஜன அபிமானத்தைப்பெற்றிருக்கிறது

இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களில் நல்ல ஏஜென்ஸி சர்விஸ்கள் இருக்கின்றன. லண்டனிலும், அமெரிக்காவிலும் பாத்யதைகளைத் (claims) தீர்ப்பதற்கு ஏஜண்டுகள் இருக்கிறார்கள்.

ஒருகோடி எண்பத்தைந்து லட்சத்திற்குமேல் செக்யூரடி இருக்கிறது

இந்தக் கம்பெனியின் ஏஜென்ஸி என்பது ஒரு நிச்சயமான வரும்படியுள்ள வேலை.

ஆயுள், தீ விபத்து முதலிய ஸ்பெஷல் இன்ஷ்யூரன்ஸ் ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கு எழுதுக.

பிரதம ஏஜண்டுகள் :—
நாராயணதாஸ் கிருதரதாஸ் (இன்ஷ்யூரன்ஸ்) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 1369.
சென்னை.

ரெஸிடெண்டு மானேஜர் :—
N. வேங்கட்ட ராம ஐயர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி.

மலர் 1 | ஞாயிறு 2-10-38 வெகுதான்ய ஆண்டு புரட்டாசிமீ 16உ [redacted] | முத்து 1

பொருள் அடக்கம்

விஷயம் — பக்கம்

1. வாழ்த்துச் செய்திகள் ... 2
2. தலையங்கம் ... 6
3. விஜயதசமி (சுத்தானந்த பாரதி) ... 7
4. நாட்டுப் பாட்டு (கொத்தமங்கலம் சுப்பிரமணியன்) ... 8
5. குறிப்பு ... 9
6. போகிற போக்கில் ... 10
7. பாரத மணி (வ. ரா.) ... 12
8. புது வருஷம் (வே. நாராயணன்) ... 13
9. கிராமம் திரும்புக! (கு. ப. ராஜகோபாலன்) ... 14
10. பாலைவனம் (பெ. நா. அப்பு ஸ்வாமி) ... 15
11. விவேகம் (எஸ். வி. வி.) ... 19
12. "துகாராம்" (சிட்டி) ... 24

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

வாழ்த்துச் செய்திகள்

(மகாவித்வான் ஸ்ரீ. ரா. ராகவய்யங்கார்)

மன்பாருயிர் யாவும்பெரி தன்பா லுறவாகி
மாய்வெம் பகையில்லாதொரு தாயின் மகவிணையாய்
என்பாவமு மேவாதுயரறமே நிலைவாழ்வின்
இதமா வொழுகுவதே பயனென் றிசைசெய்து
நன்பாரத மணிநாவொலி நாடெங்கு முழங்க
நாளுங் கலைவளரத் தொழில்வளரப் பொருள்வளரத்
தென்பால் வளர்தமிழுந் திகழ்திசைவாழ் பலமொழியுந்
திருமேனி கொள்புலமா மகளருளே துணைசெயுமே.

எழுதொணு மறைநாலினும் புகழிதய சாந்தியை யெய்தவும்
வழுவிலாதநல் வழியினின் றுயர் மன்பதைத் தொகையுய்யவும்
பொழுதெலாம் வளர்கலையினும் புரிதொழிலினும் புகுபுரவும்யாம்
தழுவுபாரத மணிமுழங்கிய தருணமே துயிலெழுவமே.

மகாமகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதய்யர்.

ஸ்ரீமான் கே. எஸ். வேங்கடரமணி "பாரத மணி" என்ற பெயருடன் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் போவதையறிந்து மகிழ்ச்சியடைந்தேன். ஸ்ரீமான் ஐயரவர்கள் சிறந்த அறிவாளி. கிராம முன்னேற்ற விஷயத்தில் அளவற்ற ஊக்கமுடையவர். அவர் முன்பு எழுதியுள்ள நூல்களில் இந்நாட்டின் கிராம வாழ்க்கையை நன்ருக எடுத்துக் காட்டியிருக்கின்ருர்.

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு கிராமமும் தனித்தனியே தனக்கு வேண்டிய அமைப்புக்களைக் குறைவின்றி உடையதாக இருந்தது. அவற்றில் வாழ்ந்துவந்த மக்கள் ஒற்றுமையும், தெய்வபக்தியும், முயற்சியும், வருவோரை ஆதரிக்கும் இயல்பும் உடையவர்களாக இருந்தார்கள். சிறுசிறு கிராமங்களில் உள்ள கோயில்களும், வேறு பல பழைய ஸம்பிரதாயங்களும் அவர்களது இனிய வாழ்க்கையின் அடையாளங்களாக உள்ளன.

இக்காலத்தில் கிராம வாழ்க்கை நிலை குலைந்து நலிந்திருக்கின்றது. நகர வாசத்தை விரும்பிய மக்கள், நூற்றுக் கணக்கான வருஷங்களாகப் போற்றிவந்த கிராம அமைப்பைப் புறக்கணித்தனர்.

ஊர்வாழ உலகம் வாழும் என்ற உண்மையை நன்குணர்ந்த ஸ்ரீமான் வேங்கடரமணி அவர்கள் தமிழ் நாட்டாருக்குக் கிராம வாழ்க்கையின் உயர்வையும், அதனை மீண்டும் செப்பஞ் செய்து போற்றி வர வேண்டியதின் அவசியத்தையும் தம் பத்திரிகையின் மூலம் வெளிப்படுத்தமுன் வந்திருத்தல் மிகவும் போற்றத்தக்கது. இம்முயற்சியால் நற்பயன் உண்டாக வேண்டுமென்று ஸர்வேசுவரன் திருவருளைச் சிந்திக்கிறேன்.

ஸ்ரீ எஸ். சத்யமூர்த்தி.

"பாரதமணி" என்ற தமிழ் வாரப் பத்திரிகையை நீங்கள் ஆரம்பிக்கப் போவதைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். "தமிழர்கள் அவர்களுடைய வீரம் செறிந்த நாகரிகத்தோடும் நுட்பமான அறிவோடும் நமது கலை மறு மலர்ச்சியில் பெரிய பங்கு எடுத்துக்கொள்ள முடியும்" என்று உங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். தமிழர்களாகிய நாம் நம்மைப் பற்றியே தாழ்மையாகக் கருதிக் கொள்பவர்கள். பலாத்கார வழிகளல்லாமல் நம்முடைய சேவையினுல் நல்ல தமிழர்களென்றும் சிறந்த இந்தியர்களென்றும் உலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. உங்களுடைய பத்திரிகையில் கவர்ச்சிதரும் விஷயங்கள் வெளிவரப் போவதை அறிகிறேன். தங்கள் பேனு சக்தி வாய்ந்தது, இனிமையானது, உணர்ச்சி ஊட்டுவது என்று எனக்குத் தெரியும். தங்களை ஆசிரியராகக் கொண்ட இப்பத்திரிகை பெரிய வெற்றி அடையப் போகிறதென்பதில் சந்தேகமில்லை. உங்களுக்குரிய எல்லா வெற்றியையும் உங்களுக்காக மட்டுமல்ல, தமிழ் நாட்டு சகோதர சகோதரிகளுக்காகவும், இந்தியாவுக்காகவுமே, நீங்கள் அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

கனம் டாக்டர் தி. சே. சௌ. ராஜன்.

நீங்கள் புதிதாக ஆரம்பித்திருக்கும் பத்திரிகைக்கு வெற்றி உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். தங்கள் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்ட அந்தப் பத்திரிகை மிகவும் உபயோக முள்ளதாயிருக்கும். அது எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த லக்ஷியத்தை அது பூர்த்தி செய்யும் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

எல்லாத் துறைகளிலும் தமிழகம் புதுமை பெற்று வருகிறது. இலக்கியச் சோலையில் நாளும் புதுப்புதுக் கற்பக மலர்கள் பூக்கின்றன. அப்புதுமை மலர்களில் ஒன்று தாங்கள் எழுதிய முருகன். அதைப் படித்தபோது நமது தமிழகத்தில் இத்தகைய நாவலர் இருப்பதைப் பற்றிப் பெருமை கொண்டேன். அறிவாற்றல்களிற் சிறந்த தாங்கள் "பாரதமணி" யென்னும் புதுயுகப் பத்திரிகை நடத்த முன் வந்திருப்பது தமிழ்க் கலையின் சீருயர்ந்த வெற்றிக்கு நல்ல அறிகுறியாகும். கலைக்கோயிலமைக்கத் தங்களைப் போன்ற அரிய அறிவாளிகளே தேவை.

பத்திரிகை யுலகம் பெரும்பாலும் ஆங்கிலப் பத்திரிகையில் வரும் நாட்செய்திகளை நகாசு செய்து கொடுப்பதிலேயே பொழுது போக்குகின்றன. மற்றப்படி, கதையிலக்கியம் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. இன்று நம்மிடையே அநதோல் ப்ரான்ஸ், சரத்சந்திரர், பிரேம் சந்திரர், பங்கிம், விக்தர் ஹ்யூகோ இவர்களைப்போன்ற நாவலர் உள்ளனர். கலைத் துறையில் வெறும் விமர்சனங்கள் மட்டும் நடக்கின்றன. கலைச்சுவையும், ஒளியும் நாடெங்கும் பரவச் சாத்திரரீதியான கலைக் கட்டுரைகள் வெளிவரவேண்டும். வங்கத்தின் அணிநடையும், ஹிந்தியின் உத்யமமும், ஆங்கிலத்தின் எல்லையற்ற விரிவும், பிரெஞ்சு மொழியின் நளினமும், ஆரியத்தின் பொருட்சிறப்பும் புதிய தமிழ் நடையிற் சேரவேண்டும். பாரத சமுதாயத்தின் உயிர்நாடியாகிய அத்யாத்மஞானத்தை ஒவ்வோர் உள்ளத்திலும் தூண்டவேண்டும். அந்த ஞானவொளியை நோக்கித்தான் உலகம் நமது பாரதக்கோயிலுக்கு யாத்திரை வந்து கொண்டிருக்கிறது. மேனுட்டுக் காரியசக்தியுடன் பாரத நாட்டின் ஆத்மசக்தியும் ஒன்றுபட்டால் மனித வாழ்வு பூரணமெய்தும். நிம்மதியான தியானத்தில் அமர்ந்து தெய்வசித்தி பெற்ற நம் பாரதமகான்கள் கண்ட ஆத்மீக உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, இக்காலத்தில் அறிவாராய்ச்சிகளால் விளங்கும் இயற்கலையுண்மைகளைச் செங்கலும் சுண்ணமுமாகக் கொண்டு, நாம் விசுவபாரத மாளிகையை அமைக்க

வேண்டும். சாத்திரஞானம் எல்லையற்றுப் பரவவேண்டும். காவியம், நாடகம், சிற்பம், சித்திரம், கல்வி, தொழில், வாணிபம், சமுதாய வாழ்வு, அரசியல் அனைத்திலுமே ஆன்மவொளி பரவிப் பொலிய வேண்டும். புதுமையும் பழமையும் பொருந்திய இத்தகைய அருங்கலை வளர்ச்சிக்கும், சமுதாய வாழ்விற்கும் தங்கள் "பாரதமணி" வழி காட்டுக! "பாரதமணிக்கு"த் தாங்கள் வகுத்துள்ள ஆதர்சங்கள் மிகவும் உயர்ந்தன. அவற்றை நிறைவேற்றி, "பாரத மணி" தமிழன்னையின் சிந்தாமணியாக விளங்குக!

ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

எனது மதிப்பிற்குரிய நண்பரான ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி அவரது வாழ்க்கை முழுதும் அமைதியாகச் செய்து கொண்டிருக்கும் தியாகத்தின் அவிர்பாகத்தை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்க முன் வந்திருக்கிறார். அவர் ஈடுபடும் எந்த வேலையிலும் தூய்மையும் சிரத்தையும் பலனும் நிச்சயம் நிறைந்திருக்கும். அவரது யோசனைகள் நமக்கு இன்றியமையாத ஒரு பொக்கிஷம். அவரது முயற்சி வெற்றியடைய வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்.

என் உயரிய நண்பர் திருவாளர் வேங்கடரமணி அவர்கள் ஒரு புதிய வாரப் பத்திரிகை தொடங்குகிறார் என்ற விஷயம் எனக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றது. அத்தகைய பத்திரிகை பழமையான பெருமைகளுக்கு நிதியாகவும் வரும் பெருமைகளுக்குக் குறி சொல்லாகவும் இருக்கும். சென்ற காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அழகாகத் திரட்டி வெளியிட்டு தற்காலத்தில் நமக்கு வழிகாட்டியாக இருந்து வருங்காலத்தை சிறப்பாக வரவேற்கும் உயிர்த்துணைவனாக அப்பத்திரிகை இருக்கும் என்பது திண்ணம். இந்த உயர்ந்த வேலையை பாரத புனருத்தாரணம், முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன் என்ற நூல்களை இயற்றிய ஆசிரியர் செய்வதுதான் பொருத்தம். என் அருமைத் தந்தையாரும் நானும் அவருடைய செய்கைகளைப் பெருமையுடனும் மதிப்புடனும் அன்புடனும் கவனித்து வந்திருக்கிறோம். அவருடைய சீரிய நோக்கம் சொற்களில் மட்டும் நில்லாமல் செய்கைகளிலும் பூத்து விளங்கும். அவர் தன் வாரப்பத்திரிகைக்கு ஒரு அழகிய பெயரை வைத்திருக்கிறார். அப்பெயர் வடமொழிச் சொல்லாக எண்ணினால் இரத்தினம் என்று பொருள் கொடுக்கும். தென்மொழிச் சொல்லாகக் கருதினால் ஒலியைப்பரப்பும் மணி என்றும் பொருள் தரும். இப்புதிய பத்திரிகையின் சுபமான உபதேசம் நம்முடைய தாயான பாரத மாதா தேவியின் ஒளியையும் ஒலியையும் பரப்பவேண்டும் என்பது என்னுடைய பேரவா.

திருப்புகழ்மணி ஸ்ரீ. டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

இந்த பரத நாட்டில் உள்ள பல பாஷைகளில் மணியாய் உள்ள பாஷை தமிழ் என்று சொல்லவேண்டும். தமிழ் பாஷையை பயில்வோர்கள் ஆனந்த கோஷத்துடன் வாழும் பெருமையை அடைவர்கள். ஆண்டவனைத் துதி செய தமிழ் போல் இனிய பாஷை கிடையாது. தத்துவங்கள் ததும்பிய இந்த தாய் பாஷையே அன்பெனும் பெரும் பொருளை பூரணமாய்ப் பெற்றது. அநேக பாஷைகளில் பயிற்சி வேண்டுமென்று தீர்மானிக்கப்படும் இக்காலங்களில், தாய் பாஷையும் தேவ பாஷையுமான, தமிழை உலகின்கண் மக்கள் எல்லோரும் நலனடைந்து வாழும் பொருட்டு வாழ்த்தவும் ஜீவராசிகளிடத்தில் அபேத அன்பின் மழையை பொழியவும் மாத்திரம் வைத்துக்கொண்டு, மானிடரின் காமக்ரோதங்களுக் கெல்லாம் மற்றைய பாஷைகளை உபயோகித்தல் தமிழின் வண்ணத்துக்கு மிகவும் பொருந்தும். பன்னூல் விளங்கும் தமிழை எங்கணும் விளங்கும்படி இனி வாரம் வாரம் மணியடித்து தமிழின் பெருமையை உணர்த்துவார்களாம். சிவகருணை நிரம்பிய தமிழ் எதற்குத்தான் கைகொடுக்காது. புதியநாகரீகத்திலும் புகுந்து அன்பை பொழியுமாறு செந்தமிழ் முருகன் பாரதமணியையும் அதை இயற்றும் ஆசிரியரையும் வாழ்த்துவாராக!

திவான் பகதூர். ஆர். வி. கிருஷ்ண ஐயர்.

நீங்கள் தமிழ் வாரப்பத்திரிகை ஆரம்பிக்கப் போவதைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். உங்களுக்குச் சகல வெற்றியும் உண்டாகட்டும். சிறந்த கற்பனை சக்தியிலும், எழுத்துத் திறமையிலும், ஜன சேவையிலும், தியாகத்திலும் மிக்க நீங்கள் இவ்வளவு நாளாய் ஏன் பத்திரிகை உலகில் பிரவேசிக்கவில்லை என்று நான் ஆச்சரியப்பட்டது உண்டு. ஈசுவரன் எதற்காக தங்களைச் சிருஷ்டித்தானோ அந்தக் காரியத்தில் நீங்கள் இறங்கப் போவதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். தங்கள் தலைமையின் கீழ், 'பாரதமணி' கல்வி பரப்புவதாகவும், ரஸமுள்ளதாகவும், பொதுஜன அபிமானம் பெற்றதாகவும் இருந்து, இந்தத் தமிழ் நாட்டில் சக்தி பெற்று விளங்கும் என்று நிச்சயமாய் நம்புகிறேன்.

ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர்.

என்னுடைய நண்பர் ஸ்ரீமான் கே. எஸ். வேங்கடரமணி ஐயரவர்கள் நாளது விஜயதசமி தினத்தில் "பாரதமணி" என்னும் ஒரு புதிய வாரப் பத்திரிகை வெளியிடுவதாகத் தீர்மானித்திருப்பது தமிழுலகிற்கு மங்களகரமான பேருதவியாகும். அவர் ஆங்கிலத்தில் வல்லமையுள்ளவர்களென்பது அவர்களியற்றிய நூல்களால் நம்மெல்லோர்க்கும் மேனாட்டார்க்கும் நன்றாகத் தெரியும். அந்நூல்கள் ஆங்கிலத்திலிருந்த போதிலும் தமிழர்களின் நாகரீகங்களையும் கொள்கைகளையும் அழகாக வெளிப்படுத்துகின்றன. அவர் முக்கியமாகத் தமிழர்களின் முன்னேற்றத்தையும் தமிழ்க் கல்வியின் ஓங்குதலையும் கருதியுழைப்பவர். எவ்விதம் நமது நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்பதைப் பற்றிப் பலதடவை உபந்யாஸங்களிலும் பத்திரிகைகளிலும் அவரது எண்ணங்களைத் தெளிவாக எழுதியுரைத்திருக்கிறார். முக்கியமாக வேளாண்மையைப் பின்பற்றியே நமது நாட்டின் செழிப்பும் செல்வமும் இருப்பதால் வேளாண்மையினது சீர்திருத்தங்களையும் நம் கிராமங்களை ஒழுங்குபடுத்துவதையும் முக்கிய கருத்தாகக் கொண்டவர். ஆகையால் அவர் தமிழில் தம் எண்ணங்களையும் மற்றைத் தமிழர்களின் கோரிக்கைகளையும் வெளிப்படுத்த ஒரு பத்திரிகை பிரசுரிப்பது அவசியமேயாகும். ஆங்கிலத்தில் வலிமையுடன் மனத்தைக் கவருமாறு எழுதும் வன்மை அவரிடம் நன்றாய் அமைந்துள்ளது. அதைப்போலவே தமிழிலும் எழுதும் தன்மை அவருக்கு நன்றாய் அமைந்துளதென்பது நன்றாய்த் தெரியும். தம்முடைய எண்ணங்களையெல்லாம் செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அவர் இப்பொழுது பெரு முயற்சி எடுத்துக் கொண்டு திருக்கடையூருக்கு அருகில் சில காரியங்களை ஆரம்பித்திருக்கிறார். அவைகளெல்லாம் நம் நாட்டின் நன்மைக்குத் தக்க செய்கைகளேயாம். அவரது பார்வையின் கீழ் அவைகள் நன்றாக ஓங்கி வளருமென்பதில் ஐயமில்லை. இப்பத்திரிகையும் அவைகளைப் பலப்படுத்தப் பெருஞ்சாதனமாக இருக்கும்.

டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்

ஸ்ரீ கே. எஸ். வெங்கடரமணி "பாரதமணி" என்ற பெயருடன் இந்திய நவஜீவனத்திற்காக உழைக்கும் ஒரு பத்திரிகையை ஆரம்பிப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமின்றி, கலைக்ஞான உயிர்விற்கும் அது பாடுபடும் என்று நம்புகிறேன். நாட்டின் அடிமைத்தனம் ஒருபுறமிருக்க, அதற்கும் இழிவான ஆன்மீகத்தாழ்வை நீக்க நாம் முதலில் உழைக்க வேண்டும். சீர்பெற்று வாழ்வதற்கு, முதலில் வாழவேண்டுமல்லவா? இல்லாவிட்டில் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

நாடடுப் பாட்டு

(தெம்மாங்கு)

கோத்தமங்கலம் சுப்பிரமணியன்.

[குடியானவன் மகனுக்கு விஜயதசமி யன்று குடுமி வைத்தார்கள். பள்ளிக் கூடத்திலே போடப் போகிறார்களாம். அதற்கான காரியங்கள் ஜரூராக நடக்கின்றன.]

குப்பான்.

1. வெல்லமாறு வெத்திலைநூறு வெட்டுப்பாக்கு ஒளக்குஆறு
நல்லஏட்டுஓலைநூறு நல்லாஎடுத்துத் தட்டுலேவெச்சுக்கொண்—டாடி
நம்ம பயலெப்படிக்கப்போடுவம்—நாடி

2. சட்டாம்புள்ளெக்குச் சாயவேட்டி சாமிக்குஒரு தூயவேட்டி
திட்டமாகவாத்தியாருக்குத் திருவப்பூரு சருவைவேட்டி—வாங்கி
சிறியபோளெப் பொட்டிக்குள்ளரத்—தாங்கி,

3. பானைவேட்டி பயலுக்குக்கட்டி பளயசிகுணுச்சட்டைபோட்டு
சீனியெடுத்துத் தட்டுலேகொட்டி சேலெபுதிசுவரிஞ்சுகட்டிக்கோடி
சென்னைவாத்தி திண்ணைப்பள்ளிக்கு—வாடி.

4. குண்டுஎளுத்தாணியோடே குந்தியிருக்கத்தடுக்குங்கூட
ரெண்டுசட்டங் கோத்துச்சேஞ்ச ரெட்டைச்செபுடித்துருக்குத்
[தோளில்—தாங்கி
ரெடியாப்பள்ளிக்கூடம்போனார்—ஓங்கி.

வாத்தியார்.

5. அப்பாவாடா குப்பான்மகனே—அங்கேபோயி குந்திக்கோடா
எப்போதுமே குருவின்பத்தி இருக்கமனசில் நினச்சுக்கோடா—ராமா
இப்பவேநேரம் பாடஞ்சொல்ல—லாமா.

6. ஹரிஹிஓம் என்றிரையடா அன்பாய் நன்றாக உரையடா
அரிய குருவாழ்க வென்றும் குருவேதுணை என்றுநன்றாய்—கூறு
ஆயிரங்காலப் பயிருனக்கிணை—யாரு.

பார்த்தவன்.

7. ஆளுக்காட்டி வெரலப்புடிச்சு—அரிக்குளியாலே அளுந்தஓரச்சு
நாளுமனிசர்க்கொசந்த அறிவைஙயந்து மனசிலருந்த ஊட்டினாரே
நல்லா அப்பெம்பணத்தை நீட்டி—னானே.

8. நாக்குமுனியைக் கடிச்சுக்கிட்டா—நாணிக்கோணி கொடிச்சுக்கிட்டா
பாக்கியத்தைப் பெற்றவவுறு பாலாலே நிரம்பிச்சப்போ—பாத்தா
பாடுபட்டு பெத்த பயலெ—ஆத்தா.

பாரத மணி

தமிழகத்திற்கும் தமிழ்த் தாய்க்கும் தொண்டு புரிவதென்ற நோக்கத்துடன் வெளி வந்துள்ள பல பத்திரிகைகள் இருக்கையில் 'நானும் அத்தொண்டில் சேருவேன்' என்ற தீர்மானம் கொள்வதே அதிக துணிவு என்று நினைத்தல் கூடும். ஆயினும் ராமன் சேதுபந்தம் செய்யும் காலத்தில் ராமசேவையில் ஈடுபட்டு ஒரு சிறிய கல்லை வெகுப் பிரயாசையோடு கொண்டு வந்து சேர்த்த அணிலின் பக்தியை பரமாத்மா பெரிதாகக் கொள்ள வில்லையா? அவ்வாறே தேசத்தொண்டு தமிழன்னையின் ஒவ்வொரு புதல்வனும் கைப்பற்ற வேண்டிய தர்மம் என்று கருதி, பாரத மணி தன்னால் இயன்றதைச் செய்ய வெளி வந்திருப்பதால் தமிழ் மக்களின் பூரண ஆதரவைப் பெரும் என்று நம்புகிறோம்.

பாரத பூமியில் புத்துயிரும் அளவிறந்த ஊக்கமும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில்; முன்னேற்றம் எவ்விதம் வரவேண்டும், எத்தகையதாய் இருக்கவேண்டும் என்று யாவரும் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். பலதுறைகளிலும் அபிவிருத்தியடைந்து உலகத்தை வியாபித்துப் பலகோடி அங்கியர்களை தங்கள் வசமாக்கி ஸாம்ராஜ்யம் புரிந்துவரும் மேல் நாட்டாரின் நாகரிகத்தை அனுசரிப்பது தான் நமக்கு வழி என்று எண்ணுபவர் அநேகர் அரசியல் இயக்கத்தில் சுதந்திரத்திற்காகப் பாடுபடுபவர்களில் கூட ஒரு சாரார் மேநாட்டு நாகரீக மோகம் பிடித்தலைகிறார்கள். அந்த நாகரிகமோ நம் கண்முன் சிதறிக் கொண்டிருக்கிறது! விஞ்ஞான வளர்ச்சியால் மேன்மையடைந்த அந்நாட்டார் நெறி தவறி பிறர் சொத்துக்கும் பூமிக்கும் ஆசைப்பட்டு, காந்தர்வாஸ்திரம் போட்ட ராமனுடைய மாயையில் அகப்பட்டு ஒருவரையொருவர் அடித்துச் செத்த அரக்கர்களைப் போல், கோரயுத்தங்கள் புரிவதும், சூதுவாதுகளால் பலவீனமான ஜனங்களை மோசம் செய்வதும், அமைதி, சமாதானம், ஒற்றுவாழுதல் என்பதையெல்லாம் முற்றிலும் மறந்து துன்பப் படுவதும் நமக்கு தெரிந்திருக்க, அவர்கள் வழியைப் பின்பற்றலாமா? முன்னே போகிறவன் தடுக்கி விழுந்தால் பின் செல்பவனுக்கு விளக்குப் பிடித்தாற்போலல்லவா?

நம் நாடு சீர்குலைந்திருப்பது உண்மை தான். பழைய காலத்து விமரிசைகளைப் பற்றி வர்ணித்து வீண்பொழுது போக்குவது முற்றிலும் தகாததே. ஆகிலும் சீர்திருத்தம் பண்ண முயலும் நம் நோக்கம் தெளிவடைய வேண்டும். சிருஷ்டிக்குட்பட்ட எந்த வஸ்துவும் தன் இயல்பையே அனுசரிக்கிறது. அதைத்தான் சான்றோர் தர்மம் எனக் கருதினர். இந்தியர் தம் இயல்பை இழக்காமல் முன்னேற வேண்டுமானால் ஆரிய தர்மத்தின் முக்கிய அம்சங்களை நன்குதெரிந்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் முன்னேற்றமடைந்தால்தான் தேச முன்னேற்றம் அழியாத வகையில் உண்டாகும். அதற்கு விடாமுயற்சியால் அறிவை வளர்த்து, மனதைக் கட்டுப்படுத்தி எல்லோரும் சுகித்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பாடுபடுவது முறை. கடமை, முறைமை, அகங்காரம். ஜடத்தன்மை; தியாகம், போகம்—என்ற தொந்தங்களே அப்பேர்ப்பட்ட விவேக வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகின்றன. இந்த தொந்தங்களை நீத்து தர்மம், புத்தி, பற்றில்லாமை என்ற குணங்களையே நாடி ஒவ்வொருவனும் உழைப்பானேயாகில் அவனுக்கும் க்ஷேமம், தேசத்திற்கும் க்ஷேமம்.

இந்த குணங்களில் ஜனங்களுக்கு மதிப்புக் குறைந்ததின் பயனாக, அகங்காரம் கொண்ட தேசியப் பொறாமைகளும், சுயநலம் பாராட்டும் வகுப்புவாதங்களும், கரையான் மண்ணை முட்டாடுவது போல் தனத்தைக் குவிப்பதே புருஷார்த்தம் என்ற மூடக் கொள்கைகளும் மேல் நாடுகளில் நர்த்தனம் செய்கின்றன. அந்நாட்டார் நாகரீகத்தில் மெச்சத்தக்க பல அம்சங்கள் இருப்பதை நாம் மறுக்கவில்லை. இங்கே குறிப்பிடுவது என்னவென்றால். சகஜமாய் நல்ல பமக்கங்கள் பல

இன்னும் வெளி வராதபோதிலும், திட்டம் சரியானதென்றே சொல்லலாம். ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு தலைக்கு ஒரு ரூபாய் வரி வைத்துக் கிடைக்கும் தொகையோடு தாமும் ஒரு பங்கு சேர்த்து நிலம் முதலானது வாங்கும் செலவுகளை நடத்த அவர்கள் எண்ணியிருப்பது மட்டும் ஒப்புக் கொள்வதற்கில்லை. படித்து உத்தியோகமில்லாதவர்களுக்கு ஒரு வழி செய்யும் பொறுப்பு ஸர்க்கார் உத்தியோகஸ்தரது மட்டும் அன்று. இந்த விஷயத்தில் செய்யும் திட்டங்கள் பயன் தருபவனவாயிருக்கும் பக்ஷத்தில் அரசாங்கத்தில் அதற்கு வேண்டிய செலவு செய்வதற்கு யாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஆனால் விவசாயத்தில் பிடிப்புள்ளவர்களைத்தான் இந்த ஆச்ரமங்களில் சேர்க்க வேணும். சேர்த்து, நூதன முறைகளில் அவர்கள் தேர்ச்சியடையும்படி நல்ல ஆசிரியர்களைக் கொண்டு போதித்து, அவர்கள் பயிரிடும் நிலங்களை அவர்களுக்கே சொந்தமாய்க் கொடுத்து வேண்டிய சௌகரியங்களையும் செய்து, அதற்குப் பதிலாய் அக்கம் பக்கத்து கிராமங்களுக்கு அவர்கள் விவசாயத்தில் லாபகரமான முறைகளை நம்பிக்கை வரும்படி ருசுப்பிக்க வேண்டுமென்று நிபந்தனை செய்தால் விவசாயிகளுக்குப் பேருதவியாயிருக்கும்.

போகிற போக்கில்

நமஸ்காரம், நண்பர்களே, அனேக நமஸ்காரம். நான்தான் தங்கள் தொண்டன் வேங்கடரமணி. மகாஜனங்களுக்கு சேவை செய்யத் தயாராக முன்வந்திருக்கிறேன். தயாரிக்கப்பட்ட ஆங்கில 'கிளாக்ஸோ' உணவில் வளர்ந்துவந்த எனக்கு, தாய்ப்பாலின்சுவை தெரியுமோ என்று நீங்கள் கேட்கலாம். பலகாலம் பனவெல்லம் தின்று அழிந்த நாவும்கூட, கொம்புத் தேன் சொட்டைக் கண்டு களித்துச் சப்புக்கொட்டுமல்லவா? அப்படியே நானும் தாய்மொழிச் சேவையைக் கண்டு களிக்கிறேன். ரஸமாய் எழுதத்தெரிந்தால் என்ன? தெரியாவிட்டால் என்ன? சேவைதானே முக்கியம்?

தவிர 'ஓடா ஓட்டத்தில்' எழுதும் எனக்கு தாய்பாஷைதானே சரியான நடைபாதை? தாய் பாஷையில் ஒரு வாரப் பத்திரிகை நடத்தவேண்டுமென்ற அவா எனக்கு வெகு காலமாயுண்டு. காலேஜில் வாசிக்கும் நாள்முதல் உண்டு.

பாரத மணியின் ஓசை, கடலோசை போல், என் காதில் கனவிலும் விழுந்து கொண்டேயிருக்கிறது. என் ஆசைக்கு அளவேது? என் கனவுக்குக் காலேது? இம்மணி உலகெங்கும் கேட்கவேண்டும். வேண்டும். சாந்தமும், சக்தியும் ஒரே குடிசையில் எங்கும் குடியிருக்க வேண்டும். இக்கால நாகரிகத்தில் சாந்தமிருந்தால் சக்தி இல்லை. சக்தி இருந்தால் சாந்தமில்லை. இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து மணம் செய்துவைக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டே, இந்தப் புன்சிரிப்புச் சுழல் மூண்ட வாரப் பத்திரிகைத் துறையில் இறங்கியிருக்கிறேன். பொது ஜனங்களின் உதவியை முழுவதும் எதிர்பார்க்கிறேன். வஞ்சனையில்லாமல் உழைக்கக் கருதியிருக்கிறேன்.

புஷ்பம் செடியிலும் உண்டு, கொடியிலும் உண்டு, மரத்திலும் உண்டு. எப்படிப் பிறந்தாலென்ன? புஷ்பம் புஷ்பம் தானே? சிகப்பாயிருந்தாலென்ன? மஞ்சளாயிருந்தாலென்ன? மணம் பல புஷ்பம் பலவாக இருந்தாலும் நறுமணம் என்கிற உணர்ச்சி ஒன்றே. அது போல, சுயநலம் தேடாமல் நிஷ்காமியமாய்த் தொண்டு செய்தால் எந்தக் கொள்கை கொண்டாலென்ன? தேச முன்னேற்றத்திற்கே அவ்வுழைப்பு பயனாகும் என்பதில் கொஞ்சம்கூட ஐயமில்லை. சாக்கடைத் தண்ணீரைப் போட்டினாலும் மல்லிகை மல்லிகையின் வாசனை

[illegible]கொண்டு பேதபுத்தி அன்னியில் நடக்கும் [illegible]ம் எனக்குக் கிடைக்கவேண்டுமென்று ஈசனைக் கோருகிறேன்.

"பாரத மணி" பிறக்கும் தினம் சுதினமாகவே அமைந்துவிட்டது. சரஸ்வதியின் கடாக்ஷம் பூரணமாகப் பெற்ற தினம் இதுவே. மகாத்மா காந்தியின் பிறந்த நாளாகவும் அமைந்திருக்கிறதே, இதைவிட மனுஷ்யயத்தினத்திற்கு மேன்மையான சுப சகுனமும் உண்டோ? பாரத மணியின் நாக்கு மகாத்மா காந்தியே. அவரைவிட இந்நாட்டிற்கு எவர் மேன்மையான தொண்டு பொழிந்திருக்கிறார்கள்? சோனை மழைபோல் சோடு தெரியாமல், ஆற்றிலும், காட்டிலும், குட்டையிலும், ஏரியிலும், தோட்டத்திலும், கிணற்றிலும், வீட்டிலும், வயலிலும் ஓர் புது வெள்ளத்தைப் பெருக்கி எங்கும் புத்துயிரை உண்டாக்கியிருக்கிறார். "பாரத மணி" அவரையே நாக்காகக்கொண்டு காலை மாலை இரு நேரமும் உலக சாந்திக்கும், சக்திக்கும் ஈசனை வேண்டும். ஒரே சிந்தையாக பாரத மாதாவின் இனிய கடலோசையை எங்கும் பரப்பும் கடமையே என் தலை பாரமாகும்.

இவ் வழகிய உலகில் வேறெங்கும் 40 கோடி ஜனங்கள் அடிமைக் கொட்டிலில் இவ்வளவு நீண்ட காலமாக தாமணியிடப்பட்டதை எவரும் பார்த்ததில்லை. இந்த அடிமைத் தனத்துக்குக் காரணம் அந்நியரல்ல, நாமே. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை நமக்கு சிரமமில்லாமல், தானே பெய்யும் மழைபோல், ஒருநாளும் வராது. ஸ்வராஜ்யம் ஆற்று வெள்ளமல்ல. கிணற்று ஜலம். நாமே சொம்பெடுத்து, தாம்பக் கயிறுகொண்டு, சுளுக்கிட்டு, தலை வணங்கி, மொண்டு எடுக்கவேண்டிய சுத்த நீர். ஒவ்வொரு [illegible] தம்மையே தாம் சீர்திருத்தம் [illegible]து, உட்புகுந்து பார்த்து, இப்பழைய [illegible]ம் கிணற்றில் கிடக்கும் துருவை வாரி, மனதைச் சீர்திருத்தம் செய்து, சுயநல எண்ணங்களைப் போக்கி பொது நன்மைக்கு முயலவேண்டும். மொழி போதாது, செயல் வேண்டும். தன் உணவு தனக்கு புஷ்டி தரவேண்டுமென்றால், தானே அதை ஜீரணத்திற்குக் கொண்டு வரவேண்டுமல்லவோ? பிறர் உதவி என்ன பிரயோஜனம்?

நமது அடிமைத்தன்மைக்கு முதல் காரணம் நமது சொல்லுக்கும் செயலுக்கும் ஏற்பட்டிருக்டிம் நீடித்த 'தீண்டாமை'யே. வாயால் சொல்லுவது ஒன்று. கையால் செய்வது மற்றொன்று. அல்லது ஒன்றுமே செய்வதில்லை. செயலில் லோபம் வந்தால், மொழியின் வன்மை எதற்கு பிரயோஜனம்? ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா? இந்த முக்கிய பழமொழியை நாம் வெகு காலமாக மொழியாகவே விபூதி சம்படத்தில் வைத்து பூஜை செய்து வருகிறோம். சொல்லையும் செயலையும் ஒரு மணையில் எப்பொழுது நாம் ஏற்றி மணம் செய்வித்து மாலையிடச் செய்கிறோமோ, அன்றையதினந்தான் நமக்கு விடுதலை கொண்டாட்ட நாள். ஐயமில்லை. அடிமைத்தனம் தொலையும்.

* * *

இந்த பிள்ளையார் சுழியை இதுவரையில் பூரணமாக வாசித்த நேயர்களிருந்தால், அவர்கள் "பாரதமணி"க்காக கவலைப்படவேண்டாம். இனிமேல் இந்தப் பேரேட்டில் இப்படிப்பட்ட பூனைக்குட்டி வேதாந்தம் எழுதவில்லையென்று உறுதிமொழி கொடுக்கிறேன். வாஸ்தவத்திலேயே காதில் ஈ புகுந்தது தெரியாமல், 'ஓடா ஓட்டத்தில்' அதைவிட வேகமாக, தினசரி சம்பவிக்கும் விஷயங்களைப் பற்றியும் அவைகளின் கர்த்தாக்களைப்பற்றியும் எழுதலாமென்றுதான் பேனாவை எடுத்தேன். செக்கோஸ்லவோகியா, ஹிட்லர், முஸோலினி, சர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் இவர்களைப்பற்றி 'ஜில்' என்று எழுத வேணுமென்று நினைத்து பிள்ளையார்சுழி போட்டேன். கலகல வென்று கபாலீசுவரன் கோவிலின் அர்த்தஜாம மணி அடித்தது. வேதாந்தம் என்னையறியாமல், மூடுபனிபோல் வந்து மூடிக்கொண்டுவிட்டது. மன்னிக்க வேண்டும். அடுத்த பிரதியை எதிர்பாருங்கள். என்னையும் கவனியுங்கள். நீங்கள் ஏமாந்து போனாலும் நான் ஏமாறப் போகிறதில்லை.

பாரத மணி

(வ. ரா.)

நண்பர் வேங்கடரமணி பாரதமணிக்கு கட்டுரை எழுத எனக்குக் கட்டளையிட்டார். அந்தக் கட்டளையை கொஞ்சம் மாற்றி ஏற்றுக் கொண்டுவிட்டேன். நான் பாரதமணியைப்பற்றி சொல்லப் போகிறேன்.

பாரதமணி யார் என்றால் அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் என்பது என் கருத்து. லோகமான்யர் யாரென்றால் திலகர் என்று எல்லோருக்கும் தெரியும். பஞ்சாபி யாரென்றால் டயர் என்று எல்லோருக்கும் தெரியும். வீர பதிவிரதை யாரென்றால் ஸ்ரீமதி கமலாநேரு என்று உங்களுக்குத் தெரிந்த விஷயம். அரசியலில் ராஜயோகி தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் என்று உங்களுக்குத் தெரியாதா? தற்போது இந்திய மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, வீரம் செறிந்து நிற்கும் வில் விஜயன் யாரென்று கேட்கக்கூட வேண்டுமா? அவர்தான் ஜவஹர்லால். லாகூர் காங்கிரஸிலிருந்து இந்த வில் விஜயனுக்கு சாரதியாக விளங்கி வரும் காந்தி பாரதமணி அல்லவா?

பண்டை நாட்களில் கண்ணன் அந்த திவ்விய மங்கள ஸ்தானத்தை வகித்தார். இன்றைக்கோ ஹிந்துஸ்தானம் என்ற ரதத்தை ஓட்டும் சாரதி காந்தி; அவர்தான் பாரதமணி. பாரத தேசத்தின் சிறப்பான நாகரிகத்தை இசையுடன் ஒலிக்கும் மணி காந்தி.

இந்த காந்தியின் பெருமைதான் என்ன? ஆண், பெண், பாலர், விருத்தர், ஹிந்து, முஸ்லீம், கறுப்பன், வெளுப்பன், முதலாளி, தொழிலாளி, படித்தவன், படிக்காதவன், எல்லோரும் சேர்ந்து ஒரு முகமாக காந்தியைப் போற்றும் காரணமென்ன? அதன் ரகசியம் யாது? அவருடைய சக்திக்கு ஊற்று எங்கிருக்கிறது? அவருடைய ரதசாரத்தியம் தவறான பாதையில் செல்லாதா? இவைகளெல்லாம் விநோதமான, ருசியுள்ள கேள்விகள்தான். ஆனால் சரியான பதில் சொல்லுவது மாத்திரம் கஷ்டம்.

காந்தி தன்னலமற்றவர். அதனாலே தான் அவருக்கு செல்வாக்கு என்று சமாதானம் சொன்னால் போதுமா? அவர் தீர்க்கமாக எதையும் யோசிப்பவர் என்றால் போதுமா? அவர் யாருக்கும் கெட்ட எண்ணம் கற்பிக்காத உத்தமன் என்றால் போதுமா? ஏற்றத்தாழ்வில்லாமல் எவரிடத்திலும் ஈசுவரத்தன்மையைப் பார்க்கும் வல்லமை காந்தியிடம் இருக்கிறது என்றால் போதுமா? மரண பயமில்லாத பாக்கியசாலி என்றால் போதுமா? உள்ளும் புறமும் ஒத்து நடக்கும் இயல்பு வாய்ந்தவர் என்று சொன்னால் அது அவருடைய சக்திக்குக் காரணமாக ஆகிவிடுமா? காந்தி பூமியைக் காட்டிலும் பொறுமைசாலி என்றால் போதுமா? அவருடைய வல்லமை மேற்சொன்ன ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் ஊற்றுப் பெருக்கெடுத்து வெள்ளமாக ஓடும்பொழுது, இதிலேதான் அவருடைய பெருமை அடங்கி யிருக்கிறது என்று சொல்லுவது தவறாகும்.

காந்தி உண்மையிலேயே மனிதப்பிறவியைச் சேர்ந்தவர்தானா என்ற சந்தேகம் அடிக்கடி எல்லோருக்கும் வரத்தான் செய்யும். ஏனென்றால், குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில், ஏனைய மனிதர்களைப்போல அவர் எதையும் சொல்லுவதும் இல்லை, செய்வதும் இல்லை. அவருடைய போக்கே அலாதியாய் இருக்கிறது. சிவனுடைய சாந்தமும் காளியினுடைய ரௌத்திரமும் பிரம்மாவினுடைய சிருஷ்டியும், ஸரஸ்வதியின் மேதையும், நாராயணனுடைய அன்பும், லக்ஷ்மியின் ஆதரவும் ஒன்று சேர்ந்த ஒரு உருவத்தை நீங்கள் ஏன் இந்த பாரதமணி என்ற உருவத்தில் கற்பனை செய்துகொள்ளக் கூடாது?

புது வருஷம்

[ஸ்ரீ வே. நாராயணன்]

ளாகிய நாம் சூரியன் மேஷ ராசியிலே புகும் வேளையிலே புதுவருஷம் பிறக்கிறது என்கிறோம். நமது ஆந்திர சகோதரர்கள் அதற்கு முன்வரும் அமாவாசையினின்று புது வருஷம் தொடங்குகிறார்கள். வட இந்தியர் அதற்கும் முன்னுள்ள பௌர்ணமி முதல் தொடங்குகிறார்கள். ஆகையால் இந்தியர் அனைவருக்கும் பொதுவான புது வருஷப் பிறப்பு நாள் ஒன்று அவசியமாகின்றது.

மேனாட்டார் ஏசுநாதர் பிறந்த நாளை ஒருவாரம் கொண்டாடி, அடுத்தவாரம் முதலாகத் தமது புது வருஷத்தைக் கொண்டாடுகின்றனர். அதுபோலவே நாம் பாரத தேவியை நவராத்திரி ஒன்பது நாளும் கொண்டாடி, ஸரஸ்வதிபூஜையன்று பாரதப் புது வருஷம் பிறப்பதாகக் கொள்வது நலம். தேசீய உணர்ச்சிக்குப் பிறப்பிடமாகும் பாக்கியம் பெற்ற நாடு வங்காள தேசம். அங்கு நவராத்திரி பூஜையை மிகப் பெரிதாகக் கொண்டாடுகிறார்கள். தேசீய இயக்கம் நமது தமிழ் நாடெங்கும் பரவச் செய்த பாரதியாரும் 1908-ம் வருஷத்திலே பதிப்பித்த 'புது வருஷம்' என்ற பாட்டிலே, நாம் புதுவருஷ வாழ்த்தாகக் கொள்ளக்கூடிய பாடலை அமைத்திருக்கிறார். "வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!" என்று தொடங்கி இந்திய மக்கள் எல்லோருக்கும் பொதுவான வாழ்த்தாக பரிணமிக்கிறது, பாரதியாரின் தேசிய ஊக்கம். அவரோடு நாமும் இன்று,

'நந்தேயத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!'

என்று போற்றுவோம்.

"வாழிய பாரத மணித் திருநாடு!" என்னும் வாழ்த்தை மனதிலே கொண்டு பாரத மக்கள் புதுவருஷப் பிறப்பாகக் கொண்டாடுதற்குரிய திருநாளிலே தொடங்கும் இப் பாரதமணியின் "சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!" இப் புது வருஷப் பிறப்பு இந்த வருஷத்திலே 'பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த' மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளாகவும் அமைந்துள்ளது நற்குணமாகுமன்றோ?

அறிவிப்பு

"பாரதமணி" வாரப்பதிப்பு இந்தியா, இலங்கை, பர்மா முதலிய விடங்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டுகளிடம் கிடைக்கும். சென்னை நகரில் எல்லா டிவிஷன்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டு கடைகளில் கிடைக்கும். உங்களுக்குப் "பாரதமணி" இதழ் கிடைக்க ஏதாவது அசௌகரியப்பட்டால் மானேஜர், பாரதமணி, 7, வடக்கு மாடவீதி, மைலாபூர், சென்னை என்ற விலாசத்திற்கு ஒரு கார்டு போடுங்கள். அடுத்த நிமிஷம் பாரத [illegible]ங்கள் இருப்பிடம் வந்து சேரும். பாரத மணியை விற்க விரும்பும் ஏஜண்டுகள் மானேஜருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மானேஜர்

ஆசிரியர் அறிக்கை

"பாரத மணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளை ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தான் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பத் தபால் தலை ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவசியம்.

ஆசிரியர்.

கிராமம் திரும்புக!

(ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்)

இந்திய நாகரிகம், அதன் குழந்தைப் பருவத்தில், கானகத் தொட்டிலில் வளர்ந்தது. அது பிறந்ததே எட்டு ஜீவ நதிகளை ரத்தக் குழாய்களாய்க் கொண்ட இந்நாட்டின் அடர்ந்த காடுகளில்தான்.

வருஷத்தில் பத்து மாசம் வெள்ளம் பெருகியோடும் இந்த நதிகளின் கரைகளில்தான் மகரிஷிகள் பிறந்தார்கள். வேதங்கள் பாடி விண்ணவாப் பொங்கிய வேள்விகள் செய்து வீரம் ஈன்றார்கள். 'யோவ: ஷிவதமோரஸ:' என்று நதியின் புனிதமான ஜலத்தைத் துதித்துப் பருகி பேரின்பம் கொண்டார்கள்.

ஹிந்து சாம்ராஜ்ஜியங்கள் ஓங்கியிருந்த காலத்திலும் கலைகளும் கேள்விகளும் நதிக்கரைகளில் அமைந்த கிராமங்களில்தான் விருத்தியாகிக்கொண்டே வந்தன. உண்மையில் நமது நாகரிகம் நகரங்களில் பிறக்கவில்லை. பல இடங்களில் பிறந்த கலைகள் அங்கே, கண்காட்சியில் இருப்பது போல, ஒரே இடத்தில் தென்பட்டன. அரசர்கள் கலைகளை அவ்விதம் ஆதரித்து நாகரிகத்தின் வேர்கள் ஓடியிருந்த நதிக்கரைகளையும் காடுகளையும் கண்கள் போலக் காத்து வந்தார்கள்.

ஹிந்து சாம்ராஜ்ஜியங்கள் கை சளைத்துப் போனதும் நமது நாகரீகம் சீர்குலைந்து போயிற்று. அரசர்கள் ஆதரவின்றி கலைகள் குன்றிப்போயின. சென்ற இரண்டு நூற்றாண்டுகளுக்குள் கைத்தொழில்களும் விவசாயமும் கூட பாதிக்கப்பட்டுப் போயின.

நமது நாட்டின் உயிர் நிலையாகிய எழுபது லட்சம் கிராமங்களும் நாடி தளர்ந்து ஜீவன் குன்றிப்போய்விட்டன. கிராமத்தில் தொழில்கள் பாழடைந்து விவசாயத்திலும் சீர்குலையும் போட்டியும் அதிகரிக்கவே கிராமவாசிகள், தங்கள் பிறந்த இடத்தில் பிழைக்க வழியில்லாமல் திரள் திரளாக கானல் நீர் போன்ற ஓர் பட்டண வாசத்து உழைப்பின் ஆறுதலைப் பெற ஓடினார்கள். அங்கே இயந்திரத்தின் இரக்கமற்ற சக்கரங்களில் அகப்பட்டுக்கொண்டு, உயிர் ரத்தத்தை அரைவயிற்றுக் கஞ்சிக்கு அர்ப்பணம் செய்து நாசமாகிறார்கள். வெகு வேகமாக கிராமங்கள் பாழடைகின்றன.

நகரங்கள் ஜன நெருக்கம் கொண்டு வியாதிகளுக்கும் வறுமைக்கும் இருப்பிடமாகி வருகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் ஓரிடத்தில் திரண்டு ஜன சமூகத்தைத் திணறவைக்கிறது.

ஒழுக்கம் குறைகிறது; உயர் நோக்கம் குறைகிறது. ஆசாபாசங்கள் கூட அறுபட்டுப் போகின்றன. மனிதன் இரை தேடித் திரியும் மிருகமாகிறான். உணர்ச்சி குன்றி அவனும் ஒரு இயந்திரமாகிறான்.

இதற்கெல்லாம் என்ன செய்வது? இவைகளைத் தவிர்க்க வழியுண்டா? மாற்றுண்டா? மருந்துண்டா? இந்திய ஜாதிக்குக் கதிமோக்ஷமுண்டா?

உண்டு. "இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு, நிலையுண்டு!" காந்திஜியின் கருணையால் இன்று நமக்கு ஒரு வழி பிறந்துவிட்டது. காந்தீயம் என்ற மருந்து இன்று நமக்குக் கைகண்டதாகி விட்டது. இருபது வருஷங்களில் ஒரு வழியைக் கண்டுவிட்டோம்.

கிராம புனருத்தாரணம்தான் நமது சஞ்சீவி. பட்டணங்களில் வந்து குவியும் கூட்டத்தை கிராமங்களின் பக்கம் திருப்பிவிடவேண்டும். தற்காலம் பொட்டலாகிக் கிடக்கும் கிராமங்களில் அந்த வெள்ளம் மறுபடியும் பாய்ந்து செழிப்பேற்ற வேண்டும்.

சுமார் பதினைந்து இருபது வருஷங்களுக்கு முன் "பாரதமணி" ஆசிரியரும் "காவிரிக்கரைக்குத் திரும்பிச் செல்லுவோமாக! அதன் புனலிலிருக்கும் பொன்னை யுண்டு பூரிப்புக் கொள்ளுவோமாக!" என்று எழுதினார். இன்று காந்தீயத்தின் முழு பலத்துடனும் ஆதரவுடனும் "பாரதமணி" கிராம புனருத்தாரணம் செய்ய முன்வந்திருக்கிறது.

பாலைவனம்

(ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி)

இளந்தளிரையும், பசும் புல்லையும், மணங்கமழும் பூவையும், தித்திக்கும் கனியையும், குளிர்ந்த தென்றலையும், இனிய நீரையும் படைத்த தெய்வம் பாலைவனத்தையும் ஏன் படைத்தது?

பாலைவனம் என்று சொல்லும்போதே, கனலைப்போல் பொரியும் மணலை உடையதாய், நீரும் நிழலும் அற்றதாய், ஈரமற்று வறண்டதாய் உள்ள ஓர் இரக்கமற்ற, பயனற்ற பிரதேசமானது நம் முன்னே வந்து நிற்கிறது. அதை நினைத்தவுடனே, அனற்கடலையே காணுவதுபோல், நம்முடைய கண் கூசுகிறது. அதில் வீசும் அனற்காற்று நம்மேல் வந்து படுவது போல் நம்முடைய உடல் தகிக்கிறது.

பாலையானது நம்முடைய உலகத்திலே ஓரிரண்டு இடங்களில் மட்டும் உள்ளதன்று. மேற்கே அட்லாண்டிக் மகா சமுத்திரம் முதல் கிழக்கே பசிபிக் மகா சமுத்திரம் வரையில் அது விரிந்து கிடக்கிறது. ஆப்பிரிக்காவில், சகாரா என்னும் பாலைவனமும், அதை அடுத்த லிபியா என்னும் பாலைவனமும். ஆசியாவிலே, அரேபியா பாலைவனமும், ஸிரியா பாலைவனமும், பாரசீகத்திலுள்ள பாலைவனப் பிரதேசங்களும். பிறகு ஒரு பிளவு. அதன் ஒரு கிளை தென்புறமாக வந்து, இந்தியாவிலுள்ள ஸிந்து பாலைவனத்தைத் தொடுகிறது; மற்றொரு கிளை வடபுறமாகச் சென்று மத்திய ஆசியா வழியாகச் சென்று மங்கோலியாவிலுள்ள கோபி பாலைவனத்தில் வந்து முடிகிறது. இந்தப் பிரதேசத்தின் நீளம் சுமார் பதினாயிரம் மையில் — கிட்டத்தட்ட உலகத்தினுடைய நீளத்தில் பேர்பாதி. ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் பெரிய பாலைவனப் பிரதேசங்கள் இருக்கின்றன.

இவற்றைத் தவிர, வேறு உலகங்களிலும் பாலைவனப் பிரதேசங்கள் இருக்கின்றன என்று வான சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். செவ்வாய் என்னும் கிரகமானது வறண்ட பிரதேசம்; அதிலே மிகுதியான பாகம் பாலைவனம்; அதனாலேதான் அது செந்நிறத்தையுடையதாக நமது கண்களுக்குத் தெரிகிறது என்கிறார்கள். இவ்வளவு பாலைவனமும் எதற்காக?

* * *

பூலோகத்திலுள்ள பாலைவனங்களுள் மிகப் பெரியது ஆப்பிரிக்காவின் வட பாகத்திலுள்ள சகாரா என்னும் பாலைவனம். அதன் விஸ்தீரணம் முப்பத்தைந்து லக்ஷம் சதுர மைல். ஆகவே அது இரண்டு இந்தியா கொண்டது. அது பிரெஞ்சுக்காரரைச் சேர்ந்தது.

நமது நாட்டிலேயும் பாலைவனங்கள் இருக்கின்றன. வடமேற்குப் பகுதியிலே ஸிந்து பாலைவனம் இருக்கிறது. இடையிடையே திட்டுத் திட்டான பாலைவனப் பிரதேசங்கள் பல இடங்களிலும் இருக்கின்றன.

* * *

நமது நாட்டுக் கவிகள் அவற்றைச் சாமானியக் கண்களாலும் மனக் கண்களாலும் கண்டிருக்கிறார்கள்.

பாலையை இவ்வாறு கண்ட கம்பர் அதை வருமாறு வருணித்திருக்கிறார். சோதிமிக்க சூரியன் நிலத்திலுள்ள ஈரம் முழுவதையும் குடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொள்ளுகிறானும். ஆதலால் வேனில் என்னும் பருவத்தைத் தவிர வேறொரு பருவமும் அந்தப் பாலைவனப் பிரதேசத்திலே கிடையாதாம். நெருப்பே உருவாகிய அக்கினி தேவனும் அந்தப் பிரதேசத்தைப் பற்றி நினைத்தால் அவனுடைய நெஞ்சு வெந்து போகுமாம். அந்தத் தேவன் அதைப் பார்த்தால் அவனுடைய கண்களும் வெந்து போகுமாம்.

"பருதிவா னவனிலம்
  பசையறப் பருகுவான்
விருதுமேற் கொண்டுலாம்
  வேனிலே யல்லதோர்
இருதுவே றின்மையால்
  எரிசுடர்க் கடவுளும்

கருதின்வேம் உள்ளமும்
காணில்வேம் நயனமும்."

என்பது அந்தப் பாட்டு. மற்றொரு பாட்டிலே, அந்தப் பாலைவனப் பிரதேசத்திலே என்றும் ஆறாதபடி அவ்வளவு சூடுள்ளதாயும், என்றென்றும் நிலைத்திருப்பதாயும் உள்ள கொடிய வெப்பத்தின் தன்மையை அவர் வர்ணித்திருக்கிறார். இரத்தம் ஆறாகப் பெருகியதால் செக்கச் சிவந்த போர்க்களத்திலே, நேராக எதிர்த்து நின்று ஆயுதங்களால் யுத்தம் செய்யத் திறமையற்றவர்களான தீயோர்கள், மறைவில் ஒளித்து நின்று, நினைக்க இயலாத இழிவான வஞ்சனைகளை இயற்றி, தீங்குகளை விளைவித்து, நல்லான் ஒருவனுக்குத் தாங்க முடியாத அவமானத்தை உண்டாக்குகிறார்கள். அதனால், அவன் தன்னுடைய உயிரினும் பெரிதாக மதித்து வந்த மானம் எனப்படும் பெரிய இரத்தினத்தை இழக்கிறான். இழந்து, பிறருடைய அவமதிப்பைப் பற்றி எண்ணுகிறான். எண்ணுந்தோறும் அஞ்சி யஞ்சி மனம் வெதும்புகிறான். அவனுடைய மனமானது துடிதுடித்துப் பரிதவிக்கிறது. அந்த மனக்கொதிப்பு ஒரு நாளும் ஆறவே ஆறாது, அல்லவா? அவனுடைய எரிகிற மனத்தினுடைய வெப்பத்தின் தன்மையைப் போன்றது அப்பாலைவனத்தினுடைய கொடிய வெப்பத்தின் தன்மையும் என்று கவி சொல்லுகிறார்.

விஞ்சுவான் மழையின்மேல்
அம்புவே லும்படச்
செஞ்சவே செருமுகத்
தன்றியே திறனிலா
வஞ்சர்தீ வினைகளால்
மானமா மணியிழந்(து)
அஞ்சினோர் நெஞ்சுபோல்
என்று(ம்) ஆறுதரோ

பாலைவனக் காட்சியை ஜயங்கொண்டாரும் கண்டிருக்கிறார். பாலைவனத்தினுடைய செக்கச் செவேலென்று சிவந்த மணற்பரப்பானது செந் நெருப்பைத் தகடாக அடித்துத் தரையாகச் செய்தது போல் இருக்கிறதாம்.

"செந்நெருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்தரைப் பரப்(பு)"

தீயதான அந்தக் கொடிய பாலைவனத்தின் தரையிலே சூட்டின்மிகுதியால் உண்டான பிளவுகளின் வழியாகத் தனக்கு அஞ்சி ஓடிய நிழல் எங்கே ஒளித்துக்கொண்டிருக்கிறது என்று சூரியன் தன்னுடைய கிரணங்களாகிற கைகளைக் கொண்டு துழாவித் தேடுகிறானும்—அதைப் பிடித்துக் களைந்தெரியும் பொருட்டு.

"தீய வக்கொடிய கான கத்தரை
திறந்த வாய்தொறு(ம்)நுழைந்த அச்
சாயை புக்கவழி யாதெனப் பரிதி
தன்க ரங்கொடு திளைக்குமே."

பாலைவனத்தில் மாஞ்செடிகள் உலர்ந்து வெடிக்கும் ஓசையைக்கூட, பாட்டுக்களின் ஓசையால் நமக்குச் சித்திரித்துக் காட்டுகிறார் கவி.

"பொரிந்த காரை கரிந்த சூரை
புகைந்த வீரை எரிந்தவே
உரிந்த பாரை எறிந்த பாலை
உலர்ந்த ஓமை கலந்தவே"
"உதிர்ந்த வன்னி ஒடுங்கு நெல்லி
உணங்கு தும்பை உலர்ந்தவேல்
பிதிர்ந்த சுள்ளி சிதைந்த வெள்ளில்
பிளந்த கள்ளி பரந்தவே."

இன்னும் ஒரு பாட்டு மிகவும் அற்புதமாய்ப் பாலைவனத்தின் சூட்டின் மிகுதியை எடுத்துக் காட்டுகிறது. இது கலிங்கத்துப் பரணியில் சில பிரதிகளில் மட்டும் காணப்படுவதால் இதை ஜயங்கொண்டார் தான் எழுதினாரா என்று ஐயப்படுவதற்கு இடமுண்டு. ஆயினும் யார் எழுதினாலென்ன?

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனது நகரமாகிய இலங்கையை அடைய எண்ணிய இராமனும் அவனுடைய குரங்குச் சேனையும் அலைகடலால் தடைபடுகின்றன. எத்தனையோ ஆலோசனை செய்து அணைகட்டுகிறார்கள்: அதற்காக மலைகளையெல்லாம் பிடுங்கிக் கடலில் எறிகிறார்கள் என்பது இராமாயணக்கதை: யாவரும் அறிந்தது. ஆனால் ஜயங்கொண்டார் 'இந்தப் பாலைவனத்தின் மணற் பரப்பிலே ஒரு மணல் அகப்பட்டிருந்தால் போதும், இத்தனை முயற்சியும் வேண்டாம்' என்றுசொல்லுகிறார். ஒரு மணலை-ஒரே ஒரு மணலை-கடலில் போட்டால் போதும்; அதன் சூட்டினால் கடல்

[illegible]ண்டு வற்றிப் போகும் என்பது கற்பனை. பாடல் வருமாறு:

அணிகொண்ட குரக்கினங்கள்
அலைகடலுக் கப்பாலை
மணல்ஒன்று காணமல்
வரையெடுத்து மயங்கினவே.

திருநெல்வேலி ஜில்லாவிலே சிறு பாலைவனப் பிரதேசம் ஒன்றிருக்கிறது. அதைத் தேரி என்று சொல்லுவார்கள். அதைக் கண்டவன் ஒருவன், கவிமனம் படைத்தவன், 'வறுத்துக் கொட்டிய மணல்' என்று வர்ணித்திருக்கிறான்.

இப் பாலைவனங்கள் பயனற்றன என்பது மட்டுமல்ல. அவற்றின் பக்கத்திலுள்ள பிரதேசங்களையும் அவை தாக்கி வருகின்றன. சில பாலைவனங்கள் நாளுக்கு நாள் தம் எல்லைகளை அதிகப்படுத்திக் கொண்டே வருகின்றன. வடக்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் கடல் வரையில் எட்டிய சகாராப் பாலைவனமும் லிபியாப் பாலைவனமும் தென்புறமுள்ள நாடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கவர்ந்து கொண்டே வருகின்றன. மணல்தான் இவற்றின் சைன்னியம். ஆற்றுமணலையே எண்ண முடியாதபோது இந்தச் சைன்னியத்தின் தொகையைப்பற்றி என்ன சொல்ல முடியும்?

பாலைவனப் பிரதேசத்திலே பகலில் சூடு பொரியும். சிற்சில வேளைகளில் இருநூறு டிகிரி வரையில் சூடு ஏறிவிடும். சூட்டினால் பாறை கிட்டத் தட்டப் பழுக்கக் காய்ந்து போகும். இரவிலே திடீரென்று சூடு குறையும். தண்ணீர் பனிக்கட்டியாக உறையும் குளிரைக் காட்டிலும் குளிர்ந்து போகும். இதனால் பாறைகள் படீர் படீரென்று வெடிக்கும்—விளக்குச் சூட்டினால் காய்ந்த சிம்மினி தண்ணீர்த் திவலை பட்டவுடன் வெடித்துப்போவது போல. இவ்வாறு வெடித்துத் தகர்ந்து [illegible] பாறை துண்டு துண்டாகிப் [illegible]ம். அங்கே வீசும் அனற்காற்று [illegible] பொடி மணலை வாரி இவற்றின்மேல் ஓயாது மோதிக்கொண்டேயிருக்கும். அரத்தைக் கொண்டு அராவுவதுபோன்ற இத்தொழிலானது நடைபெற நடைபெற பாறைகளெல்லாம் அராவப்பட்டு, பொடிப் பொடியான மணலாக மாறிக்கொண்டே வரும். இப்படியாக மணல் சைன்னியம் மேன்மேலும் திரட்டப்பட்டு மிகுந்து வரும். மேலும், காற்றானது பாலைவனத்திலுள்ள மணலை வாரி அதன் பக்கத்திலுள்ள பிரதேசத்திலே தூவிக்கொண்டேயிருக்கும். பெருங்காற்று எடுக்கும்போது மணலானது அலைபோல் புரண்டு அயலிடங்களை எல்லாம் நிரப்பும். (இராமேசுவரத்தின் பக்கத்திலே இத்தகையதான நிகழ்ச்சியை நாம் நேரில் பார்க்கலாம்.) இவ்வாறு படையெடுத்து அயல் நாடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பாலைவனமானது கவர்ந்துகொண்டே வருகிறது.

* * *

பாலைவனத்தைக் கண்டு களிப்பவர் கிடையாது. அதை வேண்டாமென்று வெறுத்துச் சிலர் அயலிடங்களைத் தேடிச் செல்லுகிறார்கள். வேறு சிலர் அதனுள்ளேயே, கொஞ்சம் நஞ்சம் நல்ல இடங்களாகப் பார்த்து, அரிதில் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறு சகாராவினுள்ளே இருபத்தைந்து லக்ஷம் ஜனங்களுக்குமேல் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள் என்று மதிக்கப்படுகிறது. வேறு சிலர் பாலைவனங்களைக் கண்டு மனம் கசிந்து, அவற்றைச் செழிக்கச் செய்யும் முயற்சிகளைத் தேடுகிறார்கள்.

* * *

ஹெலென் என்னும் பெண்ணரசியைப் பாரிஸ் கவர்ந்துகொண்டு சென்றபோது, கிரீஸ் நாடு முழுதும் ஒன்றாகத் திரண்டு, படையெடுத்துச் சென்று, அவளைக் கவர்ந்தவனைக் கொன்று, அவளை மீட்பது தமது மானக்கடனாக நினைத்தது. அப்போது பற்பல சிற்றரசர்கள் வந்து கூடினார்கள். இதாக்காவின் அரசனான ஓடிஸ்ஸியுஸ் என்பவன் அறிவிலே சிறந்த வீரன். வீட்டையும் வாசலையும் விட்டு விட்டு ஊரான் சண்டைக்குப் போகவேண்டாம் என்று அவன் தீர்மானித்தான். தன்னை அழைக்க ஆள்வருமென்பது தெரியும். அதனால், பயித்தியம் பிடித்தவனைப்போல் நடிப்பதென்று தீர்மானித்தான்—பயித்தியம் பிடித்தவனைச் சண்டைக்குத் துணையாக யார் கூப்பிடுவார்கள்? ஒரு கலப்பையில் கழுதையையும் மாட்டையும் ஜோடியாகப் பூட்டி, வறண்ட மணல் தரையிலே உப்பை விதைத்து அவன் உழுது கொண்

பாட்டும் படமும்

துகாராம் (தமிழ்)

ஸ்ரீ முசிரி சுப்ரமணிய அய்யர், ஸ்ரீமதி சீதா, பால சரஸ்வதி.

சென்ட்ரல் ஸ்டுடியோஸ், கோவை.

முசிரி கச்சேரியில் பாடினாலே உணர்ச்சி ததும்பப் பாடுவார். இந்தப் படத்தில் அவர் தம்முடைய இயற்கையான முறை பிசகாமல் பாடி யிருக்கிறார். ஆகவே நடிப்பு இல்லை என்று சொல்லுவதற்கே இடமில்லாமல் செய்துவிட்டார். பாட்டே நடிப்புக்கு பதிலாக சோபிக்கிறது. நடிக்கவும் சில இடங்களில் முயற்சி செய்திருக்கிறார். கோவிலில் சிவாஜியைக் காப்பாற்றும்படி அவர் பாண்டுரங்கனை வேண்டிப் பாடும்போது, உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார். நடிப்பு உள்ள இடங்களிலோ இல்லாத இடங்களிலோ இந்தப் படத்தை பிரபாத் படத்துடன் ஒப்பிடாமலிருக்க முடியாதென்றாலும், அம்மாதிரி ஒப்பிட்டு குற்றம் கண்டுபிடிப்பதும், குணம் பார்ப்பதும், நியாயமில்லை.

படப் பதிவின் பொறுப்பாளிகள் இன்னும் கொஞ்சம் சிரத்தை காட்டியிருந்தால் எவ்வளவோ அற்புதமாய் செய்திருக்கலாம். கூட்ஸ் வண்டி மாதிரி நகரும் இப்படத்தை முசிரியின் பாட்டுதான் காப்பாற்றுகிறது. சினிமாப் படம் என்பது வரிசையாக ஒட்டவைத்த குரூப் போட்டோக்கள் அல்ல என்பதை நம் தமிழ்ப் பட டைரக்டர்கள் எப்பொழுது உணர்வார்களோ தெரியவில்லை. ரொம்பவும் சிறிய விஷயமான காட்சித் தொடர்புகளில் கூட மோசமான தவறுகள் இருக்கின்றன. ஒரே சீனில் பால சரஸ்வதியின் சட்டை சீட்டியிலிருந்து சில்க்காக மாறும் அற்புதம் பாண்டுரங்கனின் திருவிளையாடலோ என்று சந்தேகிக்கும்படியாக இருக்கிறது. 'பிளேபாக்' கையாளப்பட்ட இடங்களில் வெற்றி இல்லை.

படம் ஸ்வாரஸ்மில்லை யென்றால் படப் பதிப்பிலும், இயற்றுவதிலும் தான் காரணம் கண்டுபிடிக்க வேண்டும். உணர்ச்சியைக் கிளப்பி உடம்பு புல்லரிக்கச் செய்ய வேண்டிய இடங்களில் காட்சிகள் சப்பென்றிருக்கின்றன. முசிரி பாண்டுரங்கனை ஸ்மரிப்பதில் பக்தியுமில்லை, உணர்ச்சியுமில்லை.

இந்தப் படத்தை எல்லோரும் அவசியமாய் கேட்கவேண்டும். முன்னால் உட்கார்ந்திருப்பவரின் தலையோ தொப்பியோ படத்தை மறைத்து விட்டால் சண்டை பிடிக்க வேண்டிய அவசியமில்லை. காமெடியன் சாரங்கபாணியின் சீன்களை மாத்திரம் அவசியம் பார்க்கவேண்டும். முசிரி, பால சரஸ்வதி இருவரின் அற்புதமான பாட்டுகளைக் கேட்க எத்தனை தடவை வேண்டுமானாலும் போகலாம். துகாராம் கதையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் நல்ல புத்தகத்தில் படித்துக் கொள்வது நல்லது. படம் முழுக் குடும்பத்திற்கேற்ற விருந்து. ஆபாசங்கள் இல்லாததால் தமிழ் டாக்கி தானோ என்று சந்தேகப்பட வேண்டுமென்று தெரிந்துகொள்ள ஆசையுள்ளவர்கள் சாரங்கபாணியின் நடிப்பை அவசியம் பார்க்கவேண்டும்.

"சிட்டி"

(முன் பக்க தொடர்ச்சி)

"பூமி எப்பொழுதாவது நோ வேகன்ஸி", வேலை காலியில்லை, என்று சொல்லிவிடுமோ?

"சொல்லாது."

"மகா தயாளுவாய் பூமி தன் பொக்கிஷத்தைத் திறந்து வைத்துக்கொண்டு நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறபொழுது அந்த பொக்கிஷத்தை விட்டுவிட்டு வேலையகப்படவில்லை, சாப்பாடகப்படவில்லை என்று ஒருவன் சொன்னால் அவன் முட்டாளா இல்லையா?"

"சர்வ முட்டாள்."

"நானும் அந்த சர்வமுட்டாளில் சேர்ந்தவன்தானே என்கிறீர்களோ?"

"உனக்குத் தான் விவேகம் உதித்துவிட்டதே. நீ எப்படி முட்டாளாவாய்" என்று மாமா சிரித்தார். பத்மநாபனும் சிரிக்கான்

அடுத்த வாரத்தில்

வ. ரா.

ந. பிச்சமூர்த்தி

"சிட்டி"

"ரஸிகன்"

"வஸந்தன்"

முதலியவர்கள் எழுதுகிறார்கள்.

இன்னும் விமரிசனங்கள், சிறு கதைகள், விசேஷக் கட்டுரைகள், செய்திகள்.

இந்தியன் பாங்க், லிமிடெட்.

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்:—சென்னை, வடக்கு பீச் ரோட்.

லோகல் ஆபீசுகள்:

எஸ்பிளனேட் : போபாம்ஸ் பிராட்வே. மைலாப்பூர் : வடக்கு மாடத் தெரு.
திருவல்லிக்கேணி : பெரிய தெரு. தியாகராஜநகர் : பிரகாசம் ரோட்.
புரசைவாக்கம் : புரசைவாக்கம் ஹைரோட்.

பிராஞ்சுகள்:

அடோனி, ஆலப்புழை, பெங்களூர், பெங்களூர் கண்டோன்மென்ட், பெஜவாடா, பம்பாய், கொச்சி, கோயம்புத்தூர், கொழும்பு, ஈரோடு, குண்டூர், யாழ்ப்பாணம், காரைக்குடி, மதுரை, நந்தியால், புதுக்கோட்டை, கொல்லம், சேலம், திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்சிறாப்பள்ளி, தூத்துக்குடி.

சப் ஆபீசுகள்:

குடிவாடா, தென்னாலி, பீமாவரம், ரேபள்ளி, தணுகு, துக்கிரிலா, நரசராவ் பேட்டை, உடுமலைப்பேட்டை.

லண்டன் நியூயார்க் ஏஜண்டுகள்:

நேஷனல் ஸிடி பாங்க் ஆப் நியூயார்க்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	47,92,800
கோரப்பட்டு, செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	12,79,280
ரிஸர்வ்களும், மற்ற நிதிகளும்	ரூ.	17,76,148
ஷேர் ஹோல்டர்களின் ரிஸர்வ் பொறுப்புகள்	ரூ.	35,13,520
30—6—38-ல் வொர்க்கிங் பண்டுகள்	ரூ.	4,44,03,799

N. கோபால அய்யர், காரியதரிசி.

பாரத மணி

விளம்பர விகிதம்

'பாரத மணி'யில் விளம்பரஞ் செய்ய

ஒரு முழுப்பக்கத்திற்கு (Per Insertion) ரூ. 15

ஒரு அரைப்பக்கத்திற்கு „ ரூ. 8

நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சந்தா விபரம்

'பார்த மணி' வருட சந்தா

உள் நாடு ரூ. 4 (தபால் சிலவு உள்பட)

வெளி நாடு ரூ. 5 „

தனிப்பிரதி விலை 1 அணா

சந்தாதாரர்கள் மணியார்டர் மூலமாகவோ, டிராப்ட் மூலமாகவோ சந்தா அனுப்பவேண்டும். தபால் ஸ்டாம்புகள் அங்கீகரிக்கப்படமாட்டா.

மானேஜர்.
7, வடக்குமாட வீதி, மைலாப்பூர்.

என். பாணமூர்த்தி,

பிரபல நகை வியாபாரி,

நெ. 77, கச்சேரி ரோடு, மைலாப்பூர்,

சென்னை.

வெள்ளி, தங்க நகைகள் செய்வதில் பிரசித்திப் பெற்றவர்கள். வேலைப்பாடுகள் உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிக்கும். வைரங்கள் கட்டுவதில் தேர்ந்தவர்கள். ஒருமுறை எங்கள் கடைக்கு விஜயம் செய்து பாருங்கள்.

இந்தியர் ஸ்தாபனம், இந்தியர் வேலைப்பாடு,

இந்தியர் முதல்.

டைஜெஸ்டோ

சகல வயிற்றுக் கோளாறுகளுக்கும்,

அஜீரணத்திற்கும், மலசிக்கலுக்கும்,

சிறந்த பழரஸ பரிகாரிணி.

ஸிட்டி டிஸ்ட்ரிப்யூட்டர்:

N. S. ராமன்,
9, பிலிப்ஸ் தெரு,
ஜி.டி., மதராஸ்.

ஜெயபாரதம் கம்பெனி,
கொண்டிசெட்டித் தெரு,
ஜி.டி., மதராஸ்.

இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு தலைமை ஆபீஸ் :- மாயவரம்
சென்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ரூ.	**25,00,000**
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ.	**21,25,000**
செலுத்தப்பட்ட மூலதனம்	... ரூ.	**17,54,368**

சென்னை ஆபீஸ்கள்

ஆர்மீனியன் தெரு, சைனு பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர், திருவல்லிக்கேணி.

டைரக்டர்கள்

ஸ்ரீ டி. ஆர். வேங்கட்டராம சாஸ்திரிகள், சி.ஐ.இ.
ஸ்ரீ என். வி. ராகவன், (மாஜி அகவுண்டண்டு ஜனரல்).
ஸ்ரீ வி. வெங்கடராமய்யர், எம்.ஏ., பி.எல்.
ஸ்ரீ ஆர். விஸ்வநாதய்யர், பி.ஏ., பி.எல்.
ஸ்ரீ கே. சிவஸ்வாமி ஐயர்.
ஸ்ரீ கே. சுப்பய்யர்.
ஸ்ரீ ஆர். எஸ். யே. சங்கரய்யர்.
ஸ்ரீ எஸ். என். என். சங்காலிங்க ஐயர்,
(மானேஜிங் டைரக்டர்)

தி ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்

தபால் பெட்டி நெ. 182, சென்னை.

தலைவர் :- கனம் ஸ்ரீ வி. ராமதாஸ் பந்துலு, பி.ஏ., பி.எல்.

கோவாபரேடிவ் பாலிஸிகள் :- இந்த பாலிஸிகள் மூலம் நல்ல பத்திரமான சாசுவத நிதி சேமிக்கப்படுகிறது. இதன் மூலம் குடும்பத்திற்கும், குழந்தைகளின் கல்விக்கும், விவாகத்திற்கும் பாதுகாப்பு கொடுக்கிறது. தற்கால முறைக்கு ஏற்றபடி இந்த பாலிஸிகள் அமைந்திருக்கிறது.

தென்னாட்டில் எல்லா இடங்களிலும் பாலிசிதாரர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் வேலை செய்ய சொஸைடியின் கிளைகளிருக்கின்றன.

கடப்பா, கர்நூல், சித்தூர் முதலிய இடங்களில் ஏஜன்ஸிகள் ஸ்தாபிக்கப்படப்போவதால் விருப்பமுள்ளவர்கள் மனுச் செய்துகொள்ளலாம்.

வி. வெங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.
(காரியதரிசி).

நம்பிக்கையான நிவாரணி

எல்லா சூதகக் கோளாறுகளையும் போக்குவது;
ஸ்திரீகளின் தேகத்திற்கு வலுவூட்டும்
சிறந்த டானிக்

லோத்ரா

எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

கேஸரி குடீரம், மதராஸ்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

இந்தியாவின் மிகப் பெரிய ஜனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி

ஈடுபடும் காரியங்கள் :

தீ, ஆயுள், கப்பல், மோட்டார்கள், பஸ்ஸுகள், வாடகை மோட்டார்கள், லாரிகள், ஜாமீன் பத்திரங்கள், தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு,

களவு, பிளேட் கிளாஸ், சரீரத்திற்கு விபத்து, சாமான்கள் இன்ஷ்யூரன்ஸ், விலையுயர்ந்த சாமான்கள், நகைகள் இவற்றிற்கு பந்தோபஸ்து பாலிஸி முதலியவைகள்.

தலைமை ஆபீஸ் : எஸ்பிளனேட், போர்ட், பம்பாய்
சென்னை கிளை : 4/5, முதல் லைன் பீச்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 3,56,05,275
கொடுபட்ட மூலதனம்	ரூ. 71,21,055
மொத்தம் நிதி (31-12-37 தேதியில்)	ரூ. 2,28,07,602
கொடுத்துள்ள உரிமைத் தொகை	ரூ. 7,00,00,000 க்குமேல்

ஆயுள் :

குறிப்பிட்ட தேவைகளுக்கான பிரத்தியேக திட்டங்கள் :

ஐடியல் ஆப்ஷன் பெனிபிட் பாலிஸிகள், ஐடியல் எண்டௌமண்ட் பாலிஸிகள், குடும்ப வருமான பாலிஸிகள், உத்திரவாதமான போனஸ் பாலிஸிகள்.

முழு விபரங்களுக்கு எழுதுக :— K. K. சீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

எதிர்கால சந்ததிக்கு நமது கடமை

அநேக முக்கிய விஷயங்கள் பெற்றோர்கள் கவனத்தைக் கவரவேண்டியிருக்கிறது. எல்லா விஷயங்களை விட பெற்றோர்களுக்கு அதிக கவலையை கொடுக்கும் பிரச்னை தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியே”.

நல்ல உயர்தரக் கல்வியே குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு நல்ல அஸ்திவாரம் என்பது யாவரும் அறிவர். ஆனால், பெரும்பாலோருக்கு அவர்களுடைய அவர்கள் என்ன மாதிரி நினைக்கிறார்களோ—அவைகளைச் செய்ய முடிவதில்லை. அவர்களுடைய வருமானம் போரவில்லை. எவ்வளவோ செலவுகள் இருக்கின்றன. உயர்தரக் கல்வி என்றால் அதிகச் செலவு. தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு அநேக திட்டங்கள போட்டவைகளை மாற்றும்படி எற்படுகிறது. இதனால் பிள்ளைகளுக்கு உயர்தர கல்வி கற்பிக்க முடியாமல் போய்விடுகிறது.

கார்டியன் ஆப் இந்தியா
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

குழந்தைகளின் உயர்தர கல்வி விஷயமான பிரச்னைக்கு சௌகரியமாக நடத்தக்கூடிய திட்டத்தை அளிக்கத் தயாராயிருக்கிறது.

இந்த திட்டத்தைப்பற்றிய முழு விபரங்களுக்கு தலைமை காரியாலயத்துக்காவது அல்லது நம்தேசத்தில் பல்வேறு பாகங்களிலிருக்கும் கம்பெனியின் பிரதிநிதிகளிடத்திலாவது கேட்டு அறிந்து கொள்ளலாம்.

தலைமை ஆபீஸ் :
எஸ்பிளனேட்
பால் பெட்டி
சென்னை.

N. நாராயணன்,
மானேஜர்.

தயாராகிறது

பேபி ஸரோஜ் :

S. D. சுப்புலெக்ஷ்மி

பாபநாசம் சிவன் :

நடிக்கும்

தியாக பூமி

கதை :

"கல்கி" யின் சமூகக் கதை

டைரெக்ஷன்: K. சுப்ரமண்யம்

ஸ்டூடியோ :

தி மோஷன் பிக்சர் ப்ரொட்யூஸர்ஸ்
கம்பைன் லிமிடெட்.

விவரங்களுக்கு :

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்
கார்ப்பரேஷன்,
7, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

45

ஓடியன் புதிய வெளியீடு

தியாகராஜ பாகவதரின்

ஸ்பெஷல் !

(நவீன சாரங்கதரா & சத்தியசீலன்
டாக்கி பாடல்கள்.)

"சிவபெருமான் கிருபை"

"சொல்லு பாப்பா"

ரிக்கார்டு நெ. CA. 1159

அஸ்வத்தம்மாளின்

தேசீய கீதங்கள்

"ஜெய பாரத"

"ஒருவிதத் தொழில்"

ரிக்கார்டு நெ. 1160

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,

மவுண்டு ரோட், :: சென்னை.

Regd. No. Bharatamani

நகைகள் வாங்குவதற்கு இதுதான் நல்ல சமயம்

இந்த வருஷம் நீங்கள் நேரிலோ, தபால் மூலமாகவோ வாங்கும் சாமான்களுக்கு, ஆயிரம் ரூபாய் வரையில் மதிப்புள்ள இலவச பரிசளிப்பதென்று சுராஜ்மல்ஸ் தீர்மானித்திருக்கிறார்கள்.

மதிப்பு போடுபவர்கள், நிபுணர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் போன்ற இடை மனிதர்களிடம் வைக்கும் தவறான நம்பிக்கையினால், நகை வாங்குவதென்பது பெரிய பிரச்னையாய் விட்டது. ஆனால், சுமார் அரை நூற்றாண்டாக பொது ஜனங்களுக்கு பரிபூர்ண திருப்தியுடன் சுராஜ்மல்ஸ், ரொம்ப சுலபமான முறையில் தொண்டுசெய்து வந்திருக்கிறதென்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

'தபால் மூலம் நகைகள்' என்பது சென்ற அரை நூற்றாண்டாக எங்கள் வியாபாரத்தில் முக்கிய அம்சமாயிருந்திருக்கிறது. இதிலிருந்தே கடையின் நாணயத்திலும், யோக்யப் பொறுப்பிலும் ஜனங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பது தெரியும்.

எங்களுடைய 'கறார் விலை' கொள்கைதான் 'தபால் மூலம் ஆர்டர்' வருவதற்குக் காரணம். சாதாரண மனிதனாயிருந்தாலும், நகைகளில் விசேஷ பரிச்சயமுள்ளவர்களாயிருந்தாலும், எல்லோருக்கும் ஒரே விலைதான். ஆகவே, இடை மனிதர்கள் எதுவும் செய்ய இடமில்லை.

வெளியூர்களில் வாங்குவது எப்போதுமே கிராக்கியாகத்தான் இருக்கும். விலை ஏராளம்; ஆனால், விலைக்குத் தகுந்த உயர்ந்த ரகமாய் இராது. உங்களுடைய நண்பர்களென்று நடிக்கும், இந்த நிபுணர்களின் உதவியுடன் உங்களுக்கு இத்தகைய நகைகள்தான் விற்கப்படுகின்றன.

ராஜதானி தலை நகரத்தில் இருக்கும் இந்த முக்கிய கம்பெனி உங்களுடைய பரிபூர்ண திருப்திக்கு உத்தரவாதம் கொடுக்கிறது. அதோடு மட்டுமில்லை. சரியான விலைக்கு தகுந்த சரியான நகைகளும் கொடுக்கிறது. உங்களுக்கு வேண்டிய நகைகளை நேரில் இந்தக் கம்பெனியின் மூலமே ஆர்டர் செய்தாலென்ன?

சுராஜ்மல்ஸ்
313, எஸ்பிளனேட்,
மதராஸ்.

இலவச ரூ. 1,000
பரிசு உங்களை
தேடி நிற்கிறது.

இந்த இலவச பரிசு திட்டத்தைப்பற்றிய விவரங்களுக்கு எழுதுங்கள்.

Edited & Published by K. S. Venkataramani at No. 7, North Mada Street, Mylapore and Printed by T. K. Venkatesan, at The Jupiter Press, 16, Sembudoss Street, G.T., Madras.

185424
JL
8024, N38 BM
N38.1.1

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்

உயர்தரமான நாவல்கள்

மொழி பெயர்ப்பு—காகிதம்—அச்சு
பைண்டு முதல்தரம்.

விஷவிருக்ஷம் :— ஸ்ரீ T. N. குமாரசாமி, பி.ஏ., அவர்கள் மொழி பெயர்ப்பு
விலை ரூ. 1—8—

ஆனந்தமடம் :— ஷை ஷை ரூ. 1—4—

துர்க்கேசநந்தினி :— ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், பி.ஏ., அவர்கள் மொழிபெயர்ப்பு
விலை ரூ. 1—4—0

இந்திரா :—ஸ்ரீ S. குருசுவாமி, பி.ஏ., அவர்கள் மொழிபெயர்ப்பு ரூ. 0-12-0

மேற்கண்ட 4 நூல்களும் சேர்த்துவாங்கினல் ரூ. 4—12—0 க்குப் பதிலாக, ரூ. 4—0—0 க்குக் கிடைக்கும்.

தபால், வி.பி. செலவு தனி.

அல்லயன்ஸ் கம்பெனி,

138, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், சென்னை.

கசின் அண்டு கம்பெனி

(COUSIN & CO.)

உயர்தர மரச்சாமான்கள் தயார் செய்பவர்கள்

ஆபிஸ்களுக்கும், பாங்கிகளுக்கும்,
ஆஸ்பத்திரிகளுக்கும், வீடுகளுக்கும்

வேண்டிய எல்லா நவீன உயர்தர மரச்சாமான்கள்

மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

..ங்களுக்குச் செல்லுமுன் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து பாருங்கள் !

..ான்கள் வாங்குமுன் எங்களை கலந்துகொள்ளுவது நலம்

எங்கள் கம்பெனி " பர்னிசர்கள் " உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிக்கும்.

ஓர்க்ஷாப் :-
" சிடன்ஹாம்ஸ் ..ர்டன்ஸ் "
டிம்பர் டிபோ
சூளை.

ஆபிஸ், கம்பெனி பார்வையிடம்:-
17-18, பிராட்வே,
ஜி.டி., சென்னை.

தி கமர்ஷியல் யூனியன் பாங்கி
லிமிடெட்

நெ. 79, கீழாவணி மூல தெரு, மதுரை.

அதிகார மூலதனம் ... ரூ. **3,00,000**

பொது ஜன சேவை செய்யும் பாங்கி இதுவே.
எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

நீண்டகால பிக்ஸட் டிபாசிட்டுகள்
&
குறைந்தகாலத் தவணை டிபாசிட்டுகள்

செய்பவர்களுக்குச் சுலபமாயும், லாபகரமாயும் பணம் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

எஸ். ஜி. வாஞ்சிநாதய்யர்,
(மானேஜிங் டைரக்டர்).

பிரபல மருந்துகள்

கிடைக்கும் இடம் :

விக்டோரியா டிபோ, மைலாப்பூர், சென்னை.

வசந்த எண்ணெய் சீசா ரூ. 0-14-0
கூந்தல் வாரிக்கொள்வதற்கு சோதித்து தயார் செய்யப்பட்டது. கூந்தல் அதிக சீக்கிரமாய் வளர்வதேயல்லாமல் மிருது தன்மையும் பிரகாசமும் உண்டாகி வெகு ரமணீயமாயிருக்கும்.

நாரிகேளாஞ்சனம் சீசா ரூ. 0-12-0
சகல நேத்திர வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

பேதான தைலம் டப்பி ரூ. 0-8-0
இருமல், ஜலதோஷம், தலைவலி, கீல் நோவுகளைப் போக்கடிக்கும்.

தர்பார் மாத்திரை டப்பி ரூ. 1-0-0.
டப்பியில் தங்கத்தில் சேர்க்கப்பட்ட 25 மாத்திரைகளிருக்கும். ரத்த சுத்தி, தாது புஷ்டி, சம்போக சக்தி, உத்சாகம் உண்டாக்கும்.

சித்த அமிர்த் சீசா ரூ. 0-12-0
..க்சக்தி, பலஹீனம், அருசி, அஜீர்ணம், சுக்ல நஷ்டம், மேக வியாதிகளுக்கு அமிர்தம் போன்றது.

விக்டர் தைலக் டப்பி ரூ. 0-8-0
..டி, சொறி, தேமல் இரண்டே வேளையில் போய்விடும். எரிச்சல் கிடையாது.

இந்த மருந்துகளை வாங்கி ஒரு தடவை உபயோகித்தால் குணம் தெரியும்.

3

வது சிரமம், கெட்டவை தானாகவே வருகின்றன. உதாரணமாக, மதத்துவேஷங்கள் அற்ப புத்திக்கு அடையாளம் என்று கருதின இந்நாட்டில் மதம், ஜாதி, குலம், பாஷை முதலான விஷயங்களில் குரோதமும் மாற்சரியமும் நாளுக்கு நாள் வளர்ந்து வருவது வருந்தத் தக்க தன்றோ? இந்தச் சண்டைகளுக் கடிப்படையான வேற்றுமை புத்தி ஒழிய வேண்டும்.

பல ஜாதிகள், மதங்கள், பாஷைகள் வெகு காலமாக நம் இந்தியாவில் இருந்து வந்தாலும் இந்திய நாகரீகம் ஒன்று என்றும், அதற்கெல்லோரும் கட்டுப்பட்டு, அதை வளர்த்து வந்தார்கள் என்றும் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. இவ்வித வித்தியாசங்கள் முன்னேற்றத்துக்கு இடையூறுகள் ஆகா. அவை நம் நாட்டின் பெருமையையும் பலபட்ட சம்பத்தையுமே தெரிவிக்கின்றன. ஆகையால் ஐக்கியபத்திய எண்ணத்தோடு ஒவ்வொருவனும் ஸ்வதர்மத்தை அனுசரிப்பதே மேலாகும். தர்மம் உயிருள்ள வஸ்து. அது ஓங்குவதும் ஓய்வதும் நம் நடத்தையையும் மனப்பான்மையையும் ஒட்டியேயிருக்கும். இவ்விதம் தமிழ் நாட்டார் தமது தாய் மொழி, இயற்கைச் செல்வம், குணகுணங்கள் இவைகளை மேல்மேலும் விருத்திசெய்து மாநிலமக்களில் சிகரம் பெருவார்களென்று பாரத மணி ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கிறது.

விஜயதசமி

(ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்)

வான் ஜொலிக்குது ; மண் சிலிர்க்குது ;
 வாழி பாடின புள்ளினம் ;
தேன்மணத் தமிழ்த் தென்றல் மங்கலச்
 செய்தி கொண்டு பராவுது.
மீன் மறைந்தது ; கங்குல் வீந்தது ;
 மெய்ச்சுடர் நகை பூத்தது ;
ஆன்ம வீறுகொண் டன்னை போற்றியென்
 றன்பிசைத்தெழு வீரனே ! 1

இன்னிசைக்குழல், வீணை, யேத்தொலி
 எத்திசையிலும் ஆர்த்தன :
பன்மதத்தினர் ஒன்றுகூடிப் பல்
 லாண்டு பாடித் துதித்தனர்.
மன்னு மாதவர் ஆசி கூறினர் ;
 மன்னர் வாகைகொண் டுற்றனர்.
பொன்னரி யணை யேற்றி யன்னையைப்
 போற்றி செய்ய வெழுந்திராய் ! 2

தெய்வக் காலை புலர்ந்த தன்பர்கள்
 திருவெம் பாவை யிசைத்தனர்.
சைவர் வைணவர், சாக்தர் புத்தர்
 சமணர் கிறிஸ்தவர் இஸ்லாமியர்
ஐவகை நிலை மக்கள் யாவரும்
 அன்னையின் பணி செய்தலே,
உய்வகையெனக் கண்டு கொண்டனர் ;
 ஐக்கமோ டெழு வீரனே. 3

கோயிற் பூசை மணி யடிக்குது ;
 கொட்டு மேளங்கள் கொட்டின...
வாயிலிற் பசுந் தோரணங் கட்டி
 மனைதொறும் அணி செய்தனர்.
பாய்மதக்கரி பரிரதப்படை
 பாண்டி லூர்தி நடந்தன.
தாயின் வெற்றிப் பவனி நாளிது
 தனயனேயெழுந் தோடிவா ! 4

பொற்றிருவொடும் வாணிவந்து
 புகழத் தேவர் வணங்கினர்.
நாற்றவக் கனி வாய்ந்த தென்றிந்த
 ஞாலப் பாவலர் போற்றினர் ;
பெற்ற தாயைப் புறக்கணித்திடும்
 பிள்ளையும் ஒரு பிள்ளையோ ?
ஒற்றுமையுற சார்த் தெழுந்துநில்
 ஒப்பிலாத் தமிழ் வீரனே ! 5

வாழ்க செந்தமிழ் வாழ்க நந்தமிழ்
 வீர மாமர பென்றுமே...
வாழ்க வள்ளுவர் கம்பர் சேக்கிழார்
 வந்த பைந்தமிழ் நாட்டிசை,
வீழ்க புல்லடி மைத்தளைகளும்
 வேற்று மைத்துயர் யாவையும்,
சூழ்க சுத்த சுதந்திரச் சுடர்
 சூர ரோங்குக பாரெல்லாம் ! 6

குறிப்பு

ஹிட்லரின் ஹடம்.

இந்த வார்த்தைகளை நம் நேயர்கள் படிப்பதற்குமுன் ஐரோப்பாவும் அதன் மூலம் உலகம் முழுவதும் கோர யுத்தத்தில் வீழ்த்தப்படலாம். அக்டோபர் மாதம் முதல் தேதிவரை ஹிட்லர் கெடு வைத்திருக்கிறார். அதற்குள் அவர் சொல்லுவதை யெல்லாம் செகோஸ்லோவோக்கிய கவர்ன்மெண்டார் ஒத்துக்கொள்ளாத வரையில் சண்டை துவக்கப்படுமாம்! அவர் கேட்பது அற்ப சொற்பமில்லை. ஜர்மானியர் ஜாஸ்தி யிருப்பதாகத் தான் குறிக்கும் பிரதேசங்களை ஆறு நாளுக்குள் அணுவளவும் மாறுதலில்லாமலும், ஒரு தூசி தும்பட்டிகூட அங்கிருந்து எடுக்காமலும் ஜெர்மனியிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் இன்னும் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் நவம்பர் மாதத்துக்குள் அங்குள்ள பிரஜைகளின் அபிப்பிராயத்தை தெரிந்தெடுத்து அதன் பிரகாரம் அந்த இடங்கள் செகோஸ்லோவாக்கியாவோடே இருப்பதா, ஜெர்மனியைச் சேருவதா என்று தீர்மானிக்க வேண்டுமென்றும் கண்டிப்பாய்ச் சொல்லி யிருக்கிறார். ஆகையால் சண்டை ஏற்படாமல் தடுக்கவேண்டி இங்கிலாந்தும், பிரான்ஸும் ஹிட்லர் இழுத்த இழுப்புக்கெல்லாம் நின்றும் பயனில்லைப் போல் தோணுகிறது. ஹிட்லர் கேட்டபடி செய்தால் தனக்கு நித்திய கண்டம் ஏற்படுமென்றும், இந்த இருபது வருஷமாய் வெகு பாடுபட்டுத் தேடின பொருள்களையும் பந்தோபஸ்துக்காகக் கட்டின கோட்டை கொத்தளங்களையும் தன்னை ஸதா கெருவும் சத்துருவிடம் ஒப்படைக்க முடியாதென்றும் செக் கவர்ன்மெண்டார் சொல்லிவிட்டார்கள். இந்த நெருக்கடியான நிலைமையில் அவர்கள் காட்டிவரும் பொறுமையும் நிதானமும் உலகத்தார் மனதைக் கவர்ந்திருக்கிறது. இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் உள்ள பொது ஜனங்களும் ஹிட்லரின் அட்டஹாசமும் ஹடமும் பொறுக்காமல் தங்கள் கவர்ன்மெண்டுகளின் பேடிமையை நிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகிலும் மிஸ்டர் சேம்பர்லேனுக்கும் இன்னும் தூது செல்லும் முறையில் மோஹம் குறையவில்லை. மூன்றாம் தடவை ஜர்மனி செல்லப் போகிறார்.

இந்திய ராஜாங்கங்களின் அரசியல்

நாளுக்கு நாள் இந்திய ராஜாங்கங்களில் அரசியல் கொந்தளிப்பு அதிகப்படுகிறது. திருவாங்கூர், ஹைதராபாத், காஷ்மீர், தென்கனல், ராஜ்கோட் முதலான ஸமஸ்தானங்களில் அதிகாரிகளுக்கும் பிரஜைகளுக்கும் விரோதம் விருத்தியாகிறது. அரசியல் இயக்கத்தை அதிகாரிகள் அலக்ஷியம் செய்தாலும் பலாத்காரமாய் அடக்க வெண்ணினாலும் சமாதானம் ஏற்படாது என்பது திருவாங்கூரில் நடக்கும் சம்பவங்களிலிருந்து நன்கு விளங்கும். அந்த ராஜ்யத்திலுண்டான சச்சரவுகளை ஒரு மத்தியஸ்தரை வைத்து விசாரிக்க வேண்டுமென்றும், பொறுப்பாக்ஷி யடைவதற்காகப் பிரசாரம் பண்ணுவதற்கு ஸ்டேட் காங்கிரஸுக்குப் பூரண அனுமதி தரவேண்டு மென்றும், பொறுப்பாக்ஷி ஏற்படுத்துவது சாத்தியமா என்ற விஷயத்தைப் பரிசீலனை செய்ய எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு கமிட்டி ஏற்படுத்த வேணுமென்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி திருவாங்கூர் அதிகாரிகளுக்கு சிபார்சு செய்திருக்கிறது. இம்முறைகளை அவர்கள் அனுஷ்டிக்க வேண்டியது அவசியம். அதுபோலவே மற்ற ஸமஸ்தானங்களும் இந்த இயக்கம் வலுத்துப் பெருவெள்ளமாகிக் கரைபுரளா வண்ணம் பிரஜைகளை ஆக்ஷிமுறைகளில் சம்பந்தப்படுத்தி திருப்தி செய்வது நலம்.

விவசாய ஆச்ரமங்கள்.

அரசியல் இயக்கத்தில் அமர்ந்து ஜெயிலுக்குப் போய்ப் பிழைப்புக்கு வழி தேடாது வருந்தும் படித்த தேச ஸேவகர்களுக்கு சௌகரியம் செய்வதைப் பெரும்பாலும் முன்னிட்டு சென்னை கவர்ன்மெண்டார் சில ஆச்ரமங்கள் ஏற்படுத்தி அவைகள் ஒவ்வொன்றுக்கும் 500 ஏகரா நிலங்கள் கொடுப்பதாக தீர்மானித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தின் விவரங்கள்

டிருந்தான். அவனை அழைத்துப் போக வந்தவன் இதைக் கண்டு ஏமாந்துபோக வில்லை. ஒடிஸ்ஸியுஸ்ஸின் ஒரே மகனை டெலிமாக்கஸ் என்னும் சிறு குழந்தையை அவன் எடுத்துக்கொண்டு வந்து, ஏர்ச் சாலுக்கு நேராக நிலத்தில் விட்டான். அதைக்கண்ட ஒடிஸ்ஸியுஸ் தன் குழந்தை யின்மேல் கலப்பை படாமல் விலக்கி உழு தான். அகப்பட்டுக் கொண்டான்.

வறண்ட மணலை உழுவதைப்போல் பயித்தியக்காரச் செயல் கிடையாது என் பது ஒடிஸ்ஸியுஸ்ஸின் கருத்து. இம்மாதிரி யான முயற்சிகளால் பாலைவனம் தேவ லோகம் ஆய்விடாது.

* * *

நம்முடைய தேசத்திலே வடமேற்குப் பாகத்திலே ஓடும் ஜீவநதியாகிய ஸிந்துவா னது, 'கனவினிடையே வழிதேடி நுழைந்து ஊடுருவிச் செல்லும் ஆழ்ந்த பெரிய கருத்தைப்போல்,' வறண்ட பாலை வனத்தினிடையே ஓடிக்கொண்டு வந்தது. இருபுறமும் ஒன்றுக்கும் உதவாத பய னற்ற பாலைவனம். அதன் நடுவே அமிர்தம் போன்ற நீர்ப்பெருக்கையுடைய ஜீவநதி. அதனுடைய அமிர்தப் பிரவாகமானது வறண்ட இடத்தைச் செழிக்கச் செய்யா மல், உப்புக் கடலில் போய்ச் சேர்ந்து, உப்போடு உப்பாய் மாறிக்கொண்டே வந்தது. அதன் வேகத்தைத் தடுத்து, அதன் நீரை அணையிட்டுத் தேக்கி, இப் பொழுது பாலைவனத்தைத் தழைக்கச் செய்து விட்டார்கள்—அதிர்ந்து துணிந்த பெரும் செயலினாலே.

இதே மாதிரியாக மத்தியதரைக் கட லின் நீரைக் கொண்டு பாய்ச்சி, சகாராவில் ஈரம் தாக்கச் செய்தால், அங்கே மழை பொழியும், நிலம் தழைக்கும் என்று சிலர் எண்ணுகிறார்கள். ஒரு காலத்தில் இம் முயற்சி கையாளப் பட்டாலும் படலாம். ஆனால், சகாரா தழைப்பது அவ்வளவு உறுதியில்லை என்கிறார்கள் வேறு சில அறிவாளிகள். ஆயினும் முயற்சிகளைத் தேடிக்கொண்டே யிருக்கிறார்கள்.

* * *

இவ்வுலக வாழ்க்கையே ஒரு பாலை வனம் என்று பலர் நினைக்கிறார்கள். சிலர் அவற்றைத் துறந்து ஒதுங்கிப் போகிறார் கள். இவர்கள் சன்னியாசிகள். வேறு சிலர், வாழ்க்கையிலே கிடந்து, விலகு வதற்கு வழி தெரியாமல், சிறப்பான வாழ்க்கை புரிவதற்கும் வகை தெரியாமல், உழன்று வருந்துகிறார்கள். இவர்கள் சாமானியர்கள். வேறு சிலர், மிகமிகச் சிலர், எவ்வாறாயினும் பாலையைத் தழைக் கச் செய்யவேண்டுமென்று அரும் பாடு படுகிறார்கள். அவர்களுடைய முயற்சி உப்பு மணலை உழுவதை ஒத்ததா, அல் லது நதிக்கு அணைகட்டுவதைப் போன் றதா என்பது அம் முயற்சியினால் பிற் காலத்து விளையும் பயனைக் கொண்டே சொல்ல முடியும்.

* * *

வங்காள—பீகார் வழக்கு.

மாகாணச் சண்டைகளும் அசூயையும் விருத்தியாகு மென்றே பல அறிஞர் மாகாணச் சுயாக்ஷியை எதிர்த்தார்கள். அவர்கள் நினைத்தபடி இந்த ஒரு வருஷத் துக்குள் பல விவாதங்கள் உண்டா யிருக் கின்றன. அவைகளில் முக்கியமாய் பீகா ரில் வசிக்கும் வங்காளிகள் அங்கே யிருப் பதற்குக் குடிச்சீட்டு வாங்கவேணுமென்று பீகார் கவர்ன்மெண்டார் போட்ட உத்தர வின் மூலம் பெரிய கக்ஷி யுண்டாயிருக் கிறது. பாபு ராஜேந்திரப் பிரஸாதை காங் கிரஸ் மத்தியஸ்தம் பண்ணும்படி கேட்டுக் கொண்டதின் பேரில் அவர் விசாரணை செய்து சீக்கிரம் முடிவு சொல்லுவதாய் தெரிவித்திருக்கிறார். முடிவு எப்படி யிருந்தாலும் ஏதாவது ஒரு பக்கம் அதை ஆக்ஷேபித்தே தீரும் என்று தோன்று கிறது. எல்லாம் கடைசி முடிவில் உத்தி யோகத்துக்குத்தான் சண்டை. இருதரப்பி லும் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளும் இருந்தச் சண்டை மும்முரமா யிருப்பதுதான் வருந்தத் தக்கது.

விவேகம் 31

[எஸ். வி. வி.]

பாதுகா எனப்பட்ட கிராமம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மூன்றரை மைல். அந்தக் கிராமத்துக்கு அரைமைல் தூரத்திலுள்ள ரோட்டு வழியாய் மோட்டார் பஸ்ஸுக்கள் ஓடுகின்றன. ரோட்டில் பஸ் நிற்கிற இடத் தில் இறங்கி கிராமத்துக்கு நடந்துபோக வேண்டும்.

சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் பத்ம நாபனும் அவனுடைய மாமா கோபாலாச்சாரி யாரும் ஒரு நாள் அந்தக் கிராமத்திற்குப் போவதற்காக காலையில் ஐந்து மணிக்கு ரயிலை விட்டு இறங்கினார்கள். வெளியில் வந்து பஸ் ஸைப் பார்த்தால் ஒரு பஸ்ஸைக் கூட காணோம். பஸ் ஓட்டுகிறவர்களெல்லாம் இரண்டு தினங்களாக அவர்களுடைய எஜ மான்களிடம் சம்பள விஷயமாகத் தகரார் செய்து கொண்டு வேலைநிறுத்தம் செய்து விட்டார்களாம். தகரார் முடிகிற வரையில் பஸ்ஸுக்கள் ஓடாதென்று தெரியவந்தது. ரயில்வே ஸ்டேஷனில் சத்தத்துக்கு ஓடும் வண்டிகளையும் காணோம்.

"கிராமங்களுக்குப் போவதென்றால் இது தான் பெரிய தொல்லை. சென்னப்பட்டணம் ஆகாது மாமா. எந்த சமயத்தில் எது வேண்டுமானாலும் தயாராய் அகப்படும். எல் லோரும் கிராமத்தை அடைய வேண்டுமென் கிறார்களே. கிராமங்கள் அழகு இந்தமாதிரி இருந்தால் எப்படி வந்து இருக்க முடியும்?" என்றான் பத்மநாபன்.

"பஸ் கிராமத்தைச் சேர்ந்ததல்லடா. அது பட்டணத்தைச் சேர்ந்தது. பஸ் அழ கைச் சொல்வதை விட்டுவிட்டு கிராமத்தை ஏன் பழிக்கிறாய்? பட்டணம் பட்டணம் என் கிறாயே, பட்டணம் அழகைச் சொல்லட்டுமா? அன்றைய தினம் பதினைந்து நிமிஷங்கள் பட்டணம் பூராவும் இருட்டாய்ப் போய் விட்டதடா. எலெக்டிரிக் ஸ்டேஷனில் ஏதோ கோளாறு ஏற்பட்டதாம். ஒரே விநா டியில் பட்டணத்திலிருக்கிற எல்லா வீடுகளி லும் விளக்குகள் அணைந்து விட்டன. எல்லா ஜனங்களும் தெருவில் வந்து கத்த ஆரம் பித்து விட்டார்கள். டெலிபோன் மூலிய மாகக் கேட்கவாமென்றால் டெலிபோனும் வேலை செய்யவில்லை. அதற்கும் அதே விசை தானே. கிராமத்தில் விளக்கு என்பது ஒரு வீட்டிலுமில்லை. அன்றைய தினம் என் மச் சினன் வீட்டில் கலியாண விருந்து சாப்பிட் டுக் கொண்டிருக்கும்போது விளக்கு அணைந்து விட்டது. அப்புறம்? அப்புறந் தான்! யுத்தம் வந்தால் எதிரி எலெக்டிரிக் ஸ்டேஷன் மேல் ஒரு குண்டு போட்டு, ஜலத்தில் விஷங் கலந்து விட்டால் பட் டணம் அரோஹராதான். குழாயில் ஏதாவது ஒரு பிசகு ஏற்பட்டு இரண்டு மணி நேரம் குழாய்கள் நின்றுவிட்டால் பட்டணம் படுகிற பாட்டைப் பார். விளக்கு, தண்ணீர், இவை களைப் போல் எல்லாம் அவனவன் வீட்டில் தனித் தனியா யிருக்குமானால் ஒருநாளும் ஆபத்தில்லை. ஒருவன் வீட்டிலில்லாவிட்டால் மற்றொருவன் வீட்டிலிருந்து கொண்டு வர லாம். ஒரு பட்டணம் பூராவும் ஒன்றையே நம்பி யிருந்தால் என்றைக்கும் மோசந்தான். பைகாராவிலிருந்து விசை வருகிறதாமே? அப்புறம் பட்டணங்கள் பட்டணங்களாய் இருட்டாக்க வேண்டியதுதான். குழாய்களை யும் ஒவ்வொரு ஊருக்கு ஒவ்வொரு இடத்தி லிருந்து என்றில்லாமல், ராஜதானி பூராவுக் கும் மேட்டூர் அணைக்கட்டு மாதிரி கட்டி அங் கிருந்து குழாய்கள் வைத்தால் பட்டணத் தார்கள் கதி இன்னும் வேடிக்கையா யிருக் கும். இது புது நாகரீகமடா. 'நீ ஒன்றும் பண்ணிக் கொள்ளாதே. நான் எல்லாம் உனக் குப் பண்ணி விடுகிறேன்! நீ நிர்க்கதியாய் நில். பணத்தை மாத்திரம் கட்டி விடு.' பணம் சம்பாதிக்கிற வழிதான் தெரியவில்லை. ஒவ்வொன்றுக்கும் பணம் கட்டிக்கொண் டிருக்க வேண்டுமானால் பணத்துக்கு எங்கே போகிறது? பஸ் இல்லை என்றாயே, அதுவும் அந்த நாகரீகத்தைத் சேர்ந்தது. பஸ் வந்து ஒரு வண்டியில்லாமல் ஒழித்துவிட்டது. பஸ் நின்று விட்டதே, இப்பொழுது என்ன செய் கிறது? நடக்கவேண்டியதுதான். நட." என்றார்.

"உங்களுக்குப் பட்டணங்களைக் கண்டாலே பிடிக்கவில்லை" என்றான் பத்மநாபன்.

"உனக்கு கிராமத்தைக் கண்டால் பிடிக்க வில்லை. நல்ல காற்று, நல்ல ஊற்று ஜலம், விசா லமாகப் பரந்த பூமி, விருக்ஷங்கள், பக்ஷிகள், கண்ணுக்கு ரம்மியமாய் மரகதம்போல் பச்சை பசேலென்று பயிர் நிறைந்த வயல்கள், இவை களைக்கண்டால் உனக்குப்பிடிக்கவில்லை. சைனா பஜார்த் தெரு, வால்டாக்ஸ் தெரு, ஆனை கவுனி, மூலைக் கொத்தளம் இவைகளைக்

கண்டால் உனக்கு ஆநந்தமாயிருக்கிறது. போலீஸ் ராகவாச்சாரியார் தெருவில் குடியிருக்கிறவனுக்கு எதில் ஆநந்தம் வரும்? சரி, இப்பொழுது என்ன பண்ணுகிறது? கிளம்பு, நடக்கலாம்" என்ருர் மாமா.

"இந்த பூட்ஸ் ஒன்று காலைக் கடிக்கிறது; அதற்காகத்தான் யோசனை செய்கிறேன்' என்ருன் பத்மநாபன்.

"பூட்ஸை கையில் எடுத்துக்கொள்ளுகிறது. அது நம்மை சுமக்கிறதோ இல்லையோ? இப்பொழுது அதை நாம் சுமக்கிறது."

"அதைக் கையிலெடுத்துக் கொண்டு போகிறதென்ருல் வெட்கமாயிருக்கிறது. மாமா" என்ருன் பத்மநாபன்.

"கிராமத்திலிருப்பவர்கள் செருப்பைக் கையில் எடுத்துக்கொண்டு போக வெட்கப் படுகிறதில்லை. நீ பட்டணத்தானே இல்லையோ! சரி. வெளியில் தெரியவொட்டாமல் அதை ஒரு துணியில் சுற்றி எடுத்துக் கொள்ளுகிறது. ஹூம். ஆகட்டும். கிளம்பு" என்ருர் மாமா.

இருவரும் கால்நடையாகக் கிளம்பினூர்கள். பத்மநாபன் ஷர்ட்டு, கோட்டு, இடுப்பில் துணிக்குமேல் பெல்டு, மூக்கில் கண்ணுடி, கையில் ரிஸ்டுவாச்சு, தலையில் ஒரு அழகான குல்லாய், காலில் பூட்ஸ் இந்தக் கோலத்துடனிருந்தான். அவன் மாமா கோபாலாச்சாரியார் அரையில் ஒரு வேஷ்டி, மேலுக்கு ஒரு அங்கவஸ்திரம், கையில் ஒரு மடிசஞ்சி, காதில் சுற்றிய பூணூல், இந்தக் கோலத்துடனிருந்தார். பத்மநாபன் தங்கையினுடைய கலியாண விஷயமாய்ப் பிள்ளையின் தகப்பனூர் பாதுகா கிராமத்திலிருப்பதால் அங்கு வந்து தகப்பனூருடன் பேசி முடிவு செய்வதற்காகப் பத்மநாபனும் அவன் மாமாவும் சென்னப் பட்டணத்திலிருந்து கிளம்பி வந்தார்கள். இருவரும் அந்த கிராமத்திற்கு இதற்குமுன் வந்ததில்லை. பத்மநாபன் எந்தக் கிராமத்துக்குமே இதற்குமுன் போனதில்லை. பட்டணத்தில் அவன் தகப்பனூர் கார்பொரேஷனில் வேலையாயிருந்தார். பத்மநாபன் பட்டணத்திலேயே பிறந்து வளர்ந்தவன். பத்மநாபன் பச்சையப்பன் காலேஜில் சேர்ந்து படித்து பீ. ஏ. பாஸ் செய்தான். அவன் தகப்பனூர் இறந்து விட்டார். இவனுடைய தாயார் தங்கை இவன் ஆகிய மூன்று பேர்களுந்தான் வீட்டில். உத்தியோகத்திலிருக்கும் அநேகர்களைப் போல் அவர் தகப்பனூர் இருந்த வரைக்கும் சம்பாதித்தார். செலவு செய்தார்; கையில் காலணு இல்லாமல் இறந்துவிட்டார்.

சொத்தும் ஒன்றும் கிடையாது. பிணத்தை எடுப்பதற்கே தாயார் கையில் போட்டிருந்த இரண்டு வளையல்களை விற்றுக் காரியம் நடக்க வேண்டியிருந்தது. உத்தியோகத்தில் சம்பாதிக்கிறவர்கள் கதி அநேகமாக இப்படித்தான். பத்மநாபன் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையில் வந்துவிட்டது. போதாதற்கு கலியாணம் செய்து கொடுக்கவேண்டிய தங்கை ஒருத்தியிருந்தாள். நான்கு வருஷங்களாக எங்கெங்கேயோ வேலைக்குப் பிரயத்தனப்பட்டுப் பார்த்தான். அங்கே வேலை கொடுக்கிறேன் என்கிருர்கள்; இங்கே கொடுக்கிறேன் என்கிருர்கள் என்று மாத்திரம் சொல்லிக்கொண்டு வந்தானேயொழிய, ஒரு வேலையும் கிடைக்கவில்லை. என்ன செய்வான் பாபம்! எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறது, பீ. ஏ. பாஸ் செய்திருக்கும் ஒருவனூல் மாதம் இருபது ரூபாய் கூடவா சம்பாதிக்காமலிருக்க முடியும் என்று சொல்லுகிறவர்கள் சொல்லலாமே, ஒழிய, இருபது ரூபாய் தான் எப்படி சம்பாதிக்கிறது? வேலை செய்ய பத்மநாபன் தயார்தான். வேலை எங்கே கிடைக்கிறது. வேலையகப்படாமல் சம்பாத்தியமில்லாம விருப்பவன் படும் கஷ்டத்தை பிறத்தியார் சாதாரணமாய்த் தெரிந்து கொள்ளமுடியாது. அவரவர்களுக்கு அம்மாதிரி கஷ்டம் வந்தால்தான் தெரியும். கொஞ்சநாள் கால் அரை என்று தெரிந்த சிநேகிதர்களிடத்திலெல்லாம் கடன் வாங்கினூன். இவனுக்குக் கடன் கொடுத்திராத சிநேகிதனே இல்லாமற் போய்விட்டது. இனி யாரையுங் கடன் கேட்பதற்கில்லை. கடைகளில் சாமான்கள் கடனூய் வாங்கி வந்தான். ஒரு கடையில் கணக்கு அதிகமாய் ஏறிவிட்டால் அதைவிட்டு வேறு கடையில் கடன் வாங்குகிறது. இம்மாதிரி கொஞ்சநாள் காலத்தைக் கழித்தான். கடன் கொடுத்த கடைக்காரர்கள் கடன் கேட்க வீட்டிற்கு வந்தால் என்ன செய்வான்? வீட்டிலிருந்துகொண்டே இல்லை என்று சொல்லச் சொல்லுகிறது. அவர்கள் தெருவில் நின்று திட்டிவிட்டுப் போவார்கள். நேருக்கு நேராய் அகப்பட்டுக் கொண்டால் 'புதன்கிழமை ஒரு இடத்திலிருந்து பணம் வருகிறது, கட்டாயம் பைசல் செய்துவிடுகிறேன்' என்று புளுகுகிறது. ஆஹா! பீ. ஏ. பாஸ் செய்த பிள்ளை! எவ்வளவோ நாணயமாகவும் கௌரவமாகவும் பிழைக்கவேண்டியவன்! படிப்பின் அழகு சம்பாதிக்கிறதற்கு யோக்கியதையில்லாமல் செய்ததுடன் புளுகும் புளுகுருட்டும் தலைப்பா மாற்றி போமும் செய்யும்படிக்காகவா கொண்டு வந்துவிடுகிறது. அவன் வேண்டுமென்ருு இந்த அற்ப வழிகளில் இறங்கினுன்? இது அவன் செய்த

வினையா, படிப்பு என்று எழுதினூர்களே அவர்கள் செய்த கொடுரமா? பத்மநாபனுக்கு நிலைமை சகிக்கமுடியாமற் போய்விட்டது. ஆனூல் படிப்பு ஒன்று இருக்கிறதோ இல்லையோ, அதனுடைய குணம் பேச்சு மாத்திரம் ரொம்ப அழகாய்க் கிளம்பும். 'வேலையில்லாதவர்கள் கிராமத்துக்குப் போய்இருக்கிறது' என்கிருர்களே அது முடிகிற காரியமா? கிராமத்தில் போய் நான்கு நாளிருந்தால் அவனுக்குப் பயித்தியம் பிடித்துவிடும். வாயால் வக்கணையாய்ச் சொல்லிவிடலாம். கிராமத்தில் நம்மோடு பேசுவதற்குத்தகுதியான ஆள் ஒருவன் இருப்பானூ? காந்தி சொல்லுகிற மாதிரி காந்தி ஒருவர்தானிருக்கலாம்." என்று இம்மாதிரியாக எந்த விஷயத்துக்குமுண்டான சாதகபாதகங்களை ரொம்ப சுவாரசியமாய் எடுத்துச் சொல்வான். அவன் பேச்சைக் கேட்டாலே என்ன புத்திசாலி என்று தோன்றும். இம்மாதிரிப் பேசிப்பேசி தானே நம் தேசம் இந்த நிலைமையிலிருக்கிறது!

சாப்பாட்டுக்குக் கஷ்டம். போதாமல் தங்கைக்குக் கலியாணம் செய்யவேண்டிய கஷ்டம் வேறு. இவன் மாமா பெண்ணுக்கு வயதாய் விட்டதே என்று கவலைப்பட்டு, தான் ஐநூறு ரூபாய் கொடுப்பதாகச் சொல்லிப் பெண்ணுக்குக் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்யச் சொன்னூர். மாமா ஒரு கிராமஸ்தர். சொற்ப நிலங்களை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டு ரொக்கத்தில் இரண்டாயிர ரூபாய் வரையில் சம்பாதித்து வைத்திருந்தார். தங்கைப் பெண்ணூச்சுதே, கலியாணம் செய்யக் கஷ்டப்படுகிருர்களே என்று மனமிரங்கி ஐநூறு ரூபாய்க் கொடுப்பதாக முன்வந்தார். அந்தக் கலியாண விஷயமாய்த் தான் இருவரும் பாதுகா கிராமத்திற்கு வந்தார்கள்.

ரயில் ஸ்டேஷனைவிட்டுக் கிளம்பும்போது மணி ஐந்தரை. காலையில் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. இவர்கள் சென்ற ரோட்டில் இரண்டு பக்கங்களிலும் பெரிய பெரிய ஆலவிருக்ஷங்கள் ஓங்கி வளர்ந்து ஒன்றையொன்று கவ்விக்கொண்டிருந்தன. பனித்துளிகள் பன்னீர் தெளிக்கிற மாதிரி இவர் ...மல் பொழிந்து கொண்டிருந்தன. காலை...த்துக்குண்டான அலாதி வாசனை வீசிக் ...ண்டிருந்தது. அந்த வாசனையை என்ன வாசனையென்று சொல்லுகிறது? காலைவேளை வாசனைதான் அது. அந்த வேளையில் வெளிக் கிளம்பிப் போகிறவர்களுக்குத் தான் அது தெரியும். ஆல மரங்களில் பக்ஷிகள் கலகலவென்று சப்தம் செய்து கொண்டிருந்தன. வழி நடப்பது உற்சாகமாக இருப்பதாகத் தன்னையறியாமலே பத்மநாபன் உணர்ந்தான்.

குளிர்ந்த காற்று மேலே வீசவும் பக்ஷிகள் தொனி செவிக்கு இனிப்பாய் இருக்கவும், சுற்றுப் பக்கங்களில் வயல்கள் பசுமையாய் கண்ணுக்கு ஒரு ஆனந்தத்தைத் தரவும், பத்மநாபன் மனதிற்கு சொல்ல இயலாத ஒரு குதூகலம் ஏற்பட்டு, "இந்த இடங்களெல்லாம் எவ்வளவு அழகாய் இருக்கிறது மாமா!' என்ருன்.

"உனக்குக் கூடத் தெரிகிறதாடா? பீ. ஏ. பாஸ் பண்ணவர்களுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே" என்ருர் மாமா.

வழியில் ரோட்டில் பாலம் கட்டி பாலத்துக்கு அடியில் ஒரு கால்வாய்ப் போய்க் கொண்டிருந்தது. தண்ணீருக் கடியிலிருந்த மணலும் அதில் விளையாடிக் கொண்டிருந்த மீன்களும் பளபளவென்று தெரியும்படியாய் ஜலம் பரிசுத்தமாய்க் கால்வாயில் ஓடிக்கொண்டிருந்தது.

"இவ்விடத்திவ் பல் தேய்த்துவிட்டுப் போகலாம்" என்ருர் மாமா.

பத்மநாபன் தண்ணீரில் கைவிட்டதும் ரேகைகளுள்பட கை பூராவும் கண்ணுடியில் தெரிகிற மாதிரி தெரியவே, சிறிய குழந்தைகள் மாதிரி தண்ணீரில் கையை விட்டு அளைந்தான். சிறு மீன்களெல்லாம் விரண்டு ஓடுவதைக் கண்டு அவைகளை இன்னும் விரட்டி அவைகளுடன் விளையாடினூன்.

"கால்வாய் ஜலம் எவ்வளவு தாவள்ளியமாயிருக்கிறது பார்த்தீர்களா மாமா!" என்ருன்.

"பாவம். இந்த மாதிரி ஜலத்தை நீ எங்கே பார்த்திருக்கிருய்!" என்ருர் மாமா.

"இந்த அழகையெல்லாம் பார்த்தால் இங்கேயே இருந்துவிடலாமா என்று இருக்கிறது மாமா" என்ருன்.

"இருந்து விடேன். பட்டணத்தில் சம்பாத்தியம் என்ன முழுகிப் போகிறது. ஆனூல் உனக்கு வேண்டியதெல்லாம் இங்கே என்ன இருக்கிறது? காபி ஹோட்டலிருக்கிறதா? காலையில் ஐந்து மணிக்கெல்லாம் இட்டிலி சாம்பார் அகப்படுமா? ஐஸ் போட்ட கிரஷ் அகப்படுமா? நீ போட்டுக்கொள்ளுகிற காலர் நெக் டை இந்த அழகுகளையெல்லாம் பார்க்கிறதற்கு இங்கே எந்த மனுஷியர்களிருக்கிருர்கள்?"

"பரிகாஸம் பண்ணுகிறீர்களோ மாமா?"

"பரிகாஸமென்னடா? வாஸ்தவத்தைத்தான் சொல்லுகிறேன்" என்ருர் மாமா.

பல் தேய்த்துக்கொண்டு, ரோட்டிலேயே கொஞ்சதூரம் போனதும் இன்னும் அடர்த்தியான ஆலமரச் சாலை ஒன்றிருந்தது. அப்பொழுது இன்னும் சரியாக விடியவில்லை. அந்த சாலைக்குக் கொஞ்ச தூரத்தில் போய்க் கொண்டிருக்கும்பொழுதே, பெண் பிள்ளைகள் குரல் கேட்டது. அதில் ஒருத்தி ஏதோ ஒரு பாட்டைச் சொல்லவும் மற்றவர்கள் அதைக் கற்றுக்கொள்ளுகிற மாதிரியும் காதில் விழுந்தது. கிட்ட நெருங்கினதும் சுமங்கலிகளும் அமங்கலிகளும் சிறு பெண் வயது வந்தவர்களுமாக சுமார் இருபது பேர்கள் ஆலமரங்களின் கீழ் உதிர்ந்து விழும் பழுத்த இலைகளைப் பொறுக்கிக் கொண்டே கிருஷ்ணனுடைய லீலைகளைப் பாட்டாக ஒருத்தி சொல்ல மற்றவர்கள் கற்றுக்கொண்டிருந்தார்கள்.

“பொல்லாத கோபிமாரம்மா—அவர்கள்
இல்லாத வார்த்தைகளைச்சொல்லுராரம்மா
நீ நம்பாதே நம்பாதே யம்மா......”

என்ற பாட்டுக் காதில் விழுந்தது. இருபது பெண்பிள்ளைகள் குரல் சேர்ந்து ஒரே சுராமாய்க் காதில் விழவே பத்மநாபன் மனதில் பெருத்த ஆனந்தமுண்டாயிற்று. பத்மநாபனும் அவன் மாமாவும் ரோட்டோடு வருவதைக் கண்டு “யாரோ புருஷாள் வராப் போலிருக்கிறதடி” என்றாள் ஒருத்தி. உடனே பாட்டு நின்றுவிட்டது. ஒவ்வொருத்தியின் மடியிலும் கோணிப்பை கட்டித் தொங்கவிட்ட மாதிரி மடி நிறைய ஆலைப் பழுப்புகள் இருந்தன. இவர்களுக்கெல்லாம் பாட்டுக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தது பதினைந்து வயதிருக்கும் ஒரு பெண். குரல் மனதை அபஹரிக்கும்படியாக மதுரமாயிருந்தது. அவளுடைய அழகு பத்மநாபன் மனதை உடனே கொள்ளை கொண்டது. அவளும் இலை பொறுக்குவதை விட்டு இவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள். இவர்களையென்றால் பத்மநாபனை. சிறுபெண் பார்வை கிழவர் பேரிலா போகும்!

பத்மநாபனும் மாமாவும் கொஞ்ச தூரம் போனபிறகு இலை பொறுக்கிக் கொண்டிருந்தவர்கள் பாட்டை நிறுத்திவிட்டு பேசிக் கொண்டே பழுப்புக்களைப் பொறுக்கினார்கள்.

“போகிறவர்கள் யாரோ தெரியவில்லை. நம்மவர்களாட்டமா இருக்கிறது. நம்ம ஊருக்குத்தான் போகிறார்களோ?” என்றாள் ஒருத்தி.

“யாரோ தெரியவில்லை. புதியவர்களாயிருக்கிறார்கள். அந்தப் புள்ளை லக்ஷணமாயிருக்கிறான். முகத்தில் நல்ல களை. கலியாணமாகாத பிள்ளையாயிருந்தால் நம்ம அலமுவைக் கொடுத்து விடலாம். என்னடி சொல்லுகிறே அலமு?”

“போ, அம்மாமி”

“போ என்னடி? யாரையாவது கலியாணம் பண்ணிண்டு தானே ஆகணும். அந்த பிள்ளை அழகாய்த் தானிருக்கிறான். கூடப் போகிற கிழவர் அப்பா போலிருக்கிறது.”

“அலமுவைக் கலியாணம் பண்ணிக் கொண்டுபோவதற்குத்தான் வந்திருக்கிறானோ என்னவோ?”

“வெறுன்ன இருங்கோ அம்மாமி” என்று சாஹசம் செய்தாள். அலமு என்றது முதலில் கிருஷ்ண லீலைப் பாட்டுப் பாடிய பதினைந்து வயதுள்ள பெண்தான். இவர்கள் பேசிக் கொண்டது பத்மநாபன் காதில் விழுந்தது. மாமா கேட்டுக் கொண்டிருந்தாரோ இல்லையோ தெரியவில்லை. காலையில் அடங்கிய குரலில் சுப்ரபாதம் சொல்லிக்கொண்டே போய்க் கொண்டிருந்தார்.

“அலமுவைப் பண்ணிக்கொண்டு போவதற்கு கசக்கிறதா என்ன? அவ்வளவு அழகும் புத்திசாலியும் யாரிருக்கிறார்கள்? இன்னும் வயது பதினைந்தாக வில்லை. அவள் கையால் ஆயிர ரூபாய் சம்பாதித்து வைத்திருக்கிறாளே!”

“ஆயிர ரூபாய் எங்கே மாமி? ஆயிரம் சேருவதற்கு இன்னும் மூன்று வருஷங்களாவது ஆகும்” என்றாள் அலமு.

“நீ நடுவில் அந்தப் பணத்தில் எடுத்து வளை சங்கிலி பண்ணிக் கொண்டாய். இல்லாவிட்டா, இப்போ ஆயிர ரூபாயிராதா?”

“எப்படியிருக்கும் மாமி? இப்போ ஏழு வருஷங்களாய் இலை தைக்கிறேன். மாதம் நாற்பது கட்டுக்களே ஆகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். நாற்பத்திக்கால் பத்து ரூபாய் ஆச்சு. அதில் துணி, ரவிக்கை, என்று இருபது ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு விடுவேன். வருஷத்தில் நூறு ரூபாய்தானே ஆகிறது. ஏழு வருஷத்தில் ஆயிர ரூபாய் என்னமா ஆய்விடும்?”

“அது என்னமோ அம்மா, உன்னைப் பண்ணிக்கொள்கிறவன் அதிர்ஷ்டசாலிதான்”.

இதற்குள் மாமா கொஞ்சதூரம் போய் நின்றுகொண்டு, “ஏண்டா பின் தங்கிவிட்டாய். வாயேண்டா” என்று உரக்கக் கத்தினார். பத்மநாபன் எழுந்து போனான்.

“ஏன் மாமா, அங்கே இலை பொறுக்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் பிராம்

[illegible] பொம்மனாட்டிகளாட்டமாயிருக்கே. [illegible] இப்படி கண்டபடி வெளியில் [illegible]கென்றும் மற்றொன்றுக்கென்றும் வருகிறார்களா என்ன?” என்றான் பத்மநாபன்.

“போகாமல் என்ன? கொஞ்சம் நாகரீகம் கொண்டாட ஆரம்பித்தால்தான் பெண்களை உள்ளே போட்டுப் பூட்டி வைக்கிறார்கள். கிராமங்களிலெல்லாம் சாதாரணமாய்ப் பொம்மனாட்டிகள் இரண்டு மூன்று பேராய்ச் சேர்ந்து குளத்துக்குப் போகிறது, கோயிலுக்குப் போகிறது என்று தனியாய்ப் போய்க்கொண்டு தானிருக்கிறார்கள். அந்தப் பொம்மனாட்டிகள் இருக்கிறார்களே, அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் இந்த க்ஷணம் ரொக்கம் ஆயிர ரூபாய்க்குக் குறையாது. காலையில் இதோ இலை பொறுக்கிக் கொண்டு போகிறார்களா, இதை முதலில் அப்படியே உலர்த்துவார்கள். இராத்திரி பனியிலிருந்த பிறகு, இலைகள் வணங்கி யிருக்கும்போது எடுத்து அடுக்கி விடுவார்கள். இப்பொழுது வீட்டுக்குப் போனவுடன் வீட்டு வேலையை முடித்துக்கொண்டு, எல்லோரும் ஒரு இடத்தில் சேர்ந்து இலை தைக்க உட்காருவார்கள். சாயந்திரம் ஐந்து மணிவரைக்கும் தைப்பார்கள். யாராவது ஒரு பெண் இராமாயணமோ வேறு ஏதாவது கதையோ படித்துக்கொண்டிருக்கும். அதைக் கேட்டுக்கொண்டே இலை தைத்துக் கொண்டிருப்பார்கள். பட்டணத்திலிருந்து கடைக்காரன் வந்து நூறு நூறு கட்டுகளாக விலைக்கு வாங்கிக் கொண்டு போய்விடுவான். எருமுட்டை இவைகளை விற்றே ஒவ்வொரு பொம்மனாட்டியும் மாதம் இருபது ரூபாய் சம்பாதிப்பாள்......”

“நீ பீ. ஏ. பாஸ் செய்துவிட்டு காலணா சம்பாதிக்க முடியவில்லையே என்று என்னைக் கேட்கிறீர்களோ மாமா?” என்றான் பத்மநாபன் சிரித்துக்கொண்டே.

“நான் கேட்கவில்லை. நீயேதான் கேட்டுக் கொள்ளுகிறாயே” என்றார் மாமா.

பத்மநாபன் மனதில் என்னன்னவோ [illegible]தான யோசனைகளெல்லாம் கிளம் [illegible]என்னவோ தீர்மானங்களையெல் [illegible]தான். அவன் யோசனைகளின் குறுக்கே அலமு அடிக்கடி ஓடிக்கொண்டிருந்தாள். “அலமு கிராமப் பெண்ணானாலே [illegible] யோசனைக்கு ஒத்தமாதிரி யிருக்கும். [illegible]ணவாஸப் பெண்ணாயிருந்தால் பிய்த்துக் [illegible]ண்டு ஓடி விடுவாள்” என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

இருவரும் போகிற வழியில் கிராமத்தைச் சேர்ந்தாற்போல் ஒரு தோட்டமிருந்தது. அதில் நிறைய கத்திரி, வெண்டை, புடலை, பாவை, கலியாணப் பூஷிணி இவைகளெல்லாம் போட்டிருந்தது. தோட்டத்தைச் சுற்றி வேலி போட்டு ரோட்டுப் பக்கம் திறந்த வழியிருந்தது. அங்கே கூடைக்காரிகள் அநேகம் பேர்கள் கரிசாய் வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஒரு பிராம்மணர் தூக்குக்கோலால் நிறுத்துக் கூடைகளில் கொட்டிப் பணம் வாங்கிக் கொண்டிருந்தார். கூடைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு கூடைக்காரிகள் போய்விட்டார்கள். அங்கிருந்த பிராம்மணர் கீழே வைத்திருந்த பணத்தைத் திரட்டி எடுத்துக் கொண்டெழுந்து, “ஸ்வாமிகள் எந்த ஊரோ?” என்று பத்மநாபனையும் மாமாவையும் கேட்டார். கிராமத்தில் யார் வந்தாலும் இப்படித்தான் விசாரிப்பார்கள். இவர்கள் தங்கள் விருத்தாந்தத்தையும் வந்த விஷயத்தையும் சொன்னார்கள். “அந்த பிள்ளை நல்ல பிள்ளை தகப்பனாரும் பரம சாது. பெண்ணை நன்றாக வைத்துக்கொண்டிருப்பார்கள். கட்டாயம் பண்ணலாம்” என்று சொன்னார்.

பத்மநாபன் தோட்டத்துக்குள் போய் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து அந்தப் பிராம்மணன் தோட்டம் எத்தனை ஏகரா விஸ்தீரணமென்றும் தோட்டப் பயிர் லாபகரந்தானா, செலவு மாதம் என்ன ஆகிறது, என்று இம்மாதிரி விசாரித்தான். “இதோ விற்றது பாருங்களேன். இன்றைக்கு இரண்டரை ரூபாயகப்பட்டது. ஒவ்வொரு நாளைக்கு மூன்றும் அகப்படும். நான்கும் அகப்படும். ஒவ்வொரு தினம் ஒன்றுமில்லாமலும் போய்விடும். எல்லாம் நாம் படுகிற பாட்டின் பேரிலிருக்கிறது” என்றார்.

பத்மநாபன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். சுபாவத்தில் படித்த நல்ல புத்திசாலியானதால் அவன் யோசனைகளெல்லாம் சுவாரஸியமான கேள்விகள் பூர்வமாக வெளிக்கிளம்பினது.

“ஏன் மாமா, சாப்பாட்டுக்கில்லை யென்று எவனெவனையோ வேலைக்கு வியர்த்தமாயுருகுகிறோமே, கீழே குனிந்து பூமியைப் பார்த்து சாப்பாட்டுக்குக் கொடு என்றால் கொடுக்குமா இல்லையா?”

“கொடுக்கும்.”

“ஒரு புடல் விரையை நட்டால் இருநூறு புடலங்காயாய்க் கொடுக்கிறேனென்று பூமி சொல்லுகிறதாயில்லையா?”

“சொல்லுகிறது. அதே மாதிரி தாவும் தருகிறது.”

(அடுத்த பக்கம் பார்க்க)